விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 294 வள்ளுவர் ஆண்டு 2054 புரட்டாதி 22 திங்கட்கிழமை (09.10.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829





## போராட்டம் நடத்தும் பண்ணையாளர்கள்

# ரணிலின் வருகைக்கு மட்டக்களப்பில் எதிர்ப்பு

(மட்டக்களப்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்றைய தினம் மட்டக்களப்புக்கு விஜயம் மேற்கொண்டபோது, அவருக்கு எதிர்ப்புத் தெரிவித்து மட்டக்களப்பு மாவட்ட பண்ணையாளர்கள் பெரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

(15ஆம் பக்கம் பார்க்க)



## ஆப்கானில் நிலநடுக்கம்

2060 பேர் பலி

(காபூல்)

ஆப்கானிஸ்தான் நாட்டின் மேற்கு 15

## ராகு - கேது

பெயர்ச்சிப் பலன்கள் உள்ளே

## பொலிஸ்மா அதிபரின்

## சேவைக்காலம் இன்றுடன் முடிவு

(கொழும்பு)

பொலிஸ் மா அதிபர் சி.டி. விக்ரமரத்னவுக்கு வழங்கப்பட்டுள்ள சேவை நீடிப்பு காலம் இன்றுடன் முடிவடைகிறது.

முன்னதாக விக்ரமரத்ன உத்தியோபூர்வமாக புதவியில் இருந்து ஓய்வுபெற்ற பின்னர், அரசாங்கம் 15

## எந்தத் தடை வந்திடினும் போராட்டம் தொடரும்

### சாணக்கியன் உறுதி



(மட்டக்களப்பு)

மயிலத்தமடு மாதவனையில் நேற்று இடம்பெற்ற மேய்ச்சல்தரை அகிம்சை வழி போராட்டத்தில் பொலிஸாரின் கெடுபிடிகளுக்கு மத்தியில் பண்ணை 15

## நீதிபதி சரவணராஜா விவகாரம்

# தாயகத்தில் பூரண ஹர்த்தால் இறுதி முடிவு இன்று எட்டப்படும்

### எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி சரவணராஜாவுக்கு அழுத்தங்கள் பிரயோகித்தமை, உயிர் அச்சுறுத்தல் விடுத்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் அது தொடர்பில் நீதி விசாரணை நடத்தக்கோரியும்தமிழ்க் கட்சிகளினால் முன்னெடுக்கப்படவுள்ள முழுக் கதவடைப்பு மற்றும் சர்வதேச நாடுகளுக்கு 15

## காங்கேசன்துறை – நாகபட்டினம்

# கப்பல் பரீட்சார்த்த ஓட்டம் வெற்றி கன்னிப் பயணம் நாளை ஆரம்பம்



(கொழும்பு)

நாகபட்டினம் - காங்கேசன்துறையிடையிலான செரியா பாணி என்றபெயரைக்கொண்ட பயணிகள் கப்பல் சேவை நாளை 10ஆம் திகதி ஆரம்பமாக உள்ள 15



## இஸ்ரேல் – பாலஸ்தீன

# முறுகல் நிலை குறித்து இலங்கை கவலை

(கொழும்பு)

இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனத்தில் தாக்குதல்கள் மற்றும் வன்முறை அதிகரிப்பு மற்றும் அதனால் ஏற்படும் உயிரிழப்புகள் குறித்து இலங்கை ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது என வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வன்முறையை 15

## காரைநகரில் வாளுடன் இளைஞன் ஒருவன் கைது

(யாழ்ப்பாணம்)

காரைநகரில் வாள் ஒன்றுடன் இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம், காரைநகர் ஊரி பகுதியை சேரந்த இளைஞன் வாள் ஒன்றை வைத்திருப்பதாக ஊர்காவற்றுறை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில், பொலிஸார் இளைஞனின் வீட்டை முற்றுகையிட்டு தேடுதல் நடத்தினர்.

அதன்போது வீட்டிலிருந்து வாள் மீட்கப்பட்டதை அடுத்து, 28 வயதான 15

## நீதிக்கு நீதி கோரி

# உயர் நீதிமன்று முன் இன்று சட்டத்தரணிகள் போராட்டம்

(கொழும்பு)

நீதிபதிகளினதும் நீதித்துறையினதும் கௌரவத்தையும், சுயாதீனத்தன்மையையும் பாதுகாக்குமாறு வலியுறுத்தி நாடளாவிய ரீதியிலுள்ள சட்டத்தரணிகள் இன்று திங்கட்கிழமை கொழும்பு உயர் நீதிமன்றத்துக்கு முன்பாக கவனயீர்ப்புப் போராட்டமொன்றை முன்னெடுக்கவுள்ளனர். 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## கந்தசாமி சிவபாதசுந்தரம் (தம்பிஅண்ணா)

அல்வாயைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கந்தசாமி சிவபாதசுந்தரம் அவர்கள் நேற்று 08.10.2023 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி - செல்லம்மா தம்பதியினரின் மகனும் காலஞ்சென்ற கிருஷ்ணபிள்ளை - சிவபாக்கியம் தம்பதியினரின் மருமகனும் சிவமலரின் பாசமிகு கணவரும் அனோஜாவின் அன்புத் தகப்பனாரும் நாகரத்தினம், கமலாதேவி ஆகியோரின் சகோதரனும் சௌந்தரராஜா, ஸ்ரீ சிவசங்கரநாதன், உதயமூர்த்தி, விநாயகமூர்த்தி, ரஞ்சனி ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற ஸ்ரீ பிரசன்னா மற்றும் ஸ்ரீ பிரதீபன், தர்சிகா, சுகன்யா, சாகித்தியன், அஞ்சனா, கீர்த்தனன், ஆர்த்திகன் ஆகியோரின் மாமனாரும் ரூபகாந்தன், பகீரதன் காலஞ்சென்ற சுரோமி ஆகியோரின் பெரியதந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 09.10.2023 காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கடவைத்தோட்டம்,
அல்வாய் கிழக்கு,
அல்வாய்.

தகவல் : குடும்பத்தினர்
077 061 0943
021 226 2235

(C-7403)

# சர்வதேச விசாரணைக்கு இடமளிக்காவிடின் ராஜபக்ஷக்களின் நிலையே ரணிலுக்கும்

## இரா. சம்பந்தன் கடும் எச்சரிக்கை



(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சர்வதேச விசாரணைகளுக்கு இடமளிக்க வேண்டும் இல்லையேல் கடந்த ஆட்சியில் ராஜபக்ஷக்களுக்கு என்ன கதி ஏற்பட்டதோ அதே நிலைமை தான் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஏற்படும் என தமிழ்த் தேசிய கூட்டணியின் தலைவர் இரா சம்பந்தன் எச்சரிக்கை செய்துள்ளார்.

இதுதொடர்பில் மேலும் கருத்துரைத்த அவர் இலங்கை மீதான ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் தீர்மானங்களை நிராகரிக்கக் கூடாது.

இறுதிப்போரில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் தொடர்பில் முறையான சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும்.

அதேவேளை முல்லைத்தீவு நீதிபதி சரவணராஜாவுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராகவும் சர்வதேச விசாரணைகள் நடத்தப்பட வேண்டும்.

இந்த நாட்டில் சர்வதேச விசாரணைகள் நடந்தால் மாத்திரமே பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு உரிய நீதி கிடைக்கும்.

அதேவேளை சர்வதேச விசாரணையே நாட்டின் இன, மத நல்லிணக்கத்துக்கு வழிவகுக்கும் இல்லையேல் நாட்டுமக்கள் அனைவரும் சந்தேகத்துடனேயே வாழவேண்டிய நிலை ஏற்படும்.

கடந்த நல்லாட்சி காலகட்டத்தில் ஐ.நா மனித உரிமை ஆணைக்குழுவின் தீர்மானங்களுக்கு இணை அனுசரணை வழங்குவதாக அப்போது பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்திருந்ததை அவர் மறந்திருக்க மாட்டார் என்று தான் நம்புவதாகவும் இரா சம்பந்தன் மேலும் தெரிவித்தார்.

நேற்றைய தினம் மட்டக்களப்பு விஜயமொன்றினை மேற்கெண்டிருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இன, மதப் பிரச்சினை உள்ளிட்ட சகல பிரச்சினைகளுக்கும் எமது ஆட்சியில் தீர்வு காணப்படும்.

ஆயினும் எக்காரணம் கொண்டும் சர்வதேச விசாரணைக்கு இடமளிக்க முடியாது எனத் தெரிவித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (7)





பல ஆயிரம்
கடந்த பதிவுகள்

பல நூற்றுக்கு மேற்பட்ட திருமணங்களை
பொருத்திய சாதனைகள்

உங்கள்
கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவையை உலகின்
எப்பாகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ள


www.kalyanamalai.lk
இணையத்தளத்தைப் பாருங்கள்

பதிவுக்கட்டணம் ரூபாய் 4,000/=



தொடர்புகளுக்கு :-
கல்யாண மாலை
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
Email : kalyanamalai.jaffna@gmail.com


# சேவைநலன் பாராட்டு



**திரு.சிற்றம்பலம் கணேசலிங்கம் (SLTAS I)**
(ஆசிரிய ஆலோசகர்)
கடமை நிறைவேற்று
உதவிக் கல்விப் பணிப்பாளர்
(முன்பள்ளி)
வலயக்கல்வி அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

முப்பத்து மூன்றாண்டுகால
தளராத சேவைதனில்
ஆசிரியனாய், ஆசிரிய ஆலோசகனாய்,
உதவிக் கல்விப் பணிப்பாளராய்
ஆற்றிய சேவைகளை மனதாரப் பாராட்டி
ஓய்வுகாலம் இனிதாய்
அமைய வாழ்த்துகின்றோம்.

**சேவை விபரம்**

| | |
|---|---|
| 1990.03.19 - 1994.12.31 | - யா/மகாஜனக் கல்லூரி |
| 1995.01.01 - 1995.12.31 | - யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி |
| 1996.01.01 - 1996.01.07 | - கிளி/கனகபுரம் மகா வித்தியாலயம் |
| 1996.01.08 - 2000.01.27 | - கிளி/இராமநாதபுரம் மகா வித்தியாலயம் |
| 2000.01.28 - 2005.08.21 | - வலயக்கல்வி அலுவலகம், கிளிநொச்சி ஆசிரிய ஆலோசகர் |
| 2005.08.22 - 2018.09.20 | - வலயக்கல்வி அலுவலகம், கிளிநொச்சி, கடமை நிறைவேற்று உதவிக் கல்விப் பணிப்பாளர் (ஆரம்பக் கல்வி) |
| 2018.09.21 - 2023.10.09 | - வலயக் கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம் (கடமை நிறைவேற்று உதவிக் கல்விப் பணிப்பாளர்), முன்பள்ளி) |

யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலக
நலன்புரிச் சங்கம்

(C-7395)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்நாட்டுப் பிரச்சினைகளைத் தீர்க்க சர்வதேசம் அவசியம் இல்லை

## மட்டக்களப்பில் மீண்டும் வலியுறுத்திய ஜனாதிபதி

(மட்டக்களப்பு)

**உள்நாட்டுப்பிரச்சினைகளை நாட்டுக்குள்ளேயே தீர்த்துக்கொள்ளலாம் சர்வதேசத்தை நாட வேண்டிய அவசியம் இல்லை என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீண்டும் தெரிவித்தார்.**



மட்டக்களப்பு சென்மைக்கல் கல்லூரியின் 150 ஆவது ஆண்டு பூர்த்தி விழா நிகழ்வில் நேற்று முன்தினம் கலந்து கொண்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இன மற்றும் மதப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணாமல் ஒரு நாடு என்ற வகையில் முன்னோக்கிச் செல்ல முடியாது என்பதால், விரைவில் அதற்குரிய தீர்வுகளை காண்பதற்காக அனைத்து தலைவர்களுடனும் பேச்சுவார்த்தைகளை நடத்தவிருப்பதாக அவர் தெரிவித்தார்.

வேறுபாடுகளை முன் நிறுத்தி மோதல்களை ஏற்படுத்திக் கொண்டதால் நாடு என்ற வகையில் இலங்கை சரிவை சந்திக்க நேரிட்டதென சுட்டிக் காட்டிய ரணில் அரசியல் ரீதியான வேறுபாடுகளும் இலங்கையை நெருக்கடிக்கு உள்ளாக்கியுள்ளதென சுட்டிக்காட்டினார்.

நாட்டின் பொருளாதாரம் முழுமையாக சரிவடைந்ததால் கடந்த வருடத்தில் நாட்டு மக்கள் முகங்கொடுத்த நெருக்கடிகளை நினைவுகூர்ந்த ஜனாதிபதி அனைத்து வேறுபாடுகளையும் விடுத்து நாட்டுக்காக அனைவரும் ஒன்றுபட்டு பயணிக்க வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

உள்நாட்டு பிரச்சினைகளை நாட்டுக்குள்ளேயே தீர்த்துக் கொள்ள வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய அவர் அதற்காக சர்வதேசத்தை நாட வேண்டிய அவசியம் இல்லை என்றும் தெரிவித்தார். (நி)

# இஸ்ரேலில் மோதல் இலங்கையர் காயம்

(ஜெருசலேம்)

இஸ்ரேலிய பாலஸ்தீன மோதலில் சிக்குண்டு இலங்கையர் ஒருவர் காயமடைந்துள்ளார் என செய்திகள் வெளியாகின்றன.

வெளிவிவகார அமைச்சு இதனை தெரிவித்துள்ளதுடன் இரு தரப்பும் பொறுமையை கடைப்பிடிக்க வேணடும் வன்முறைகளை உடனடியாக நிறுத்த வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இஸ்ரேல் தலைநகரில் ரமல்லாவில் உள்ள தூதரகங்கள் நிலைமையை உன்னிப்பாக அவதானித்த வண்ணமும் உள்ளன மோதல் இடம்பெறும் பகுதிகளில் உள்ள இலங்கையர்களுடன் தொடர்பு கொண்டுள்ளன என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. (நி)

# சீரற்ற காலநிலையால் 7 பேர் பலி, 54000 பேர் பாதிப்பு

(கொழும்பு)

நாட்டில் நிலவும் கடும் மழை காரணமாக 7 பேர் உயிரிழந்துள்ளதுடன் 23 பேர் காயமடைந்த நிலையில் 13,352 குடும்பங்களைச் சேர்ந்த 54,440 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது. இரத்தினபுரி மாவட்டத்தின் 17 பிரதேச செயலகப் பிரிவுகளில் 273 குடும்பங்களைச் சேர்ந்த 1,041 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், கேகாலை மாவட்டத்தின் மூன்று பிரதேச செயலகப் பிரிவுகளில் 278 குடும்பங்களைச் சேர்ந்த 1,058 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அனர்த்த முகாமைத்துவ நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன. கொழும்பு மாவட்டத்தின் மூன்று செயலகப் பிரிவுகளில் 70 குடும்பங்களைச் சேர்ந்த 293 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், அந்த மாவட்டத்தில் 5 பேர் உயிரிழந்துள்ளதுடன் 17 பேர் காயமடைந்துள்ளனர். (நி)

# மழையுடனான காலநிலையால் சிறுவர்களிடையே பரவும் நோய்கள்

## விசேட வைத்தியர் தீபால் பெரேரா

(கொழும்பு)

நிலவும் மழையுடனான காலநிலையை அடுத்து சிறுவர்களிடையே நோய் நிலைமை அதிகரித்து வருவதாக சிறுவர் நோய் தொடர்பான விசேட வைத்தியர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்

வயிற்றுப்போக்கு, டெங்கு மற்றும் எலி காய்ச்சல் போன்ற நோய்கள் சிறுவர்களுக்கு ஏற்படக் கூடிய வாய்ப்பு நிலவுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி,அவர்களுக்கு 3 நாட்களுக்கு மேல் நோய் நிலைமை தொடருமாயின் உடனடியாக வைத்தியர் ஒருவரை தொடர்பு கொள்ளுமாறும் சிறுவர் நோய் தொடர்பான விசேட வைத்தியர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார். (நி)

# அரச சேவையில் இனி ஆட்சேர்ப்பு இல்லை

## அமைச்சர் அதிரடி அறிவிப்பு



(கொழும்பு)

எதிர்காலத்தில் மிகவும் அத்தியாவசியமான பகுதிகளைத் தவிர அரச துறையில் எந்தவொரு வேலைக்கும் புதிய ஆட்சேர்ப்பு இடம்பெறாது என அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்துள்ளார்.

அரச சேவையானது அரசாங்கத்திற்கு தாங்க முடியாத பிரச்சினையாக மாறியுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

15 இலட்சம் அரச ஊழியர்கள் உள்ளனர். மக்கள் தொகையில் சராசரியாக 12 பேருக்கு ஒரு அரச ஊழியர் உள்ளனர்.

இது உலகின் மிக உயர்ந்த அரச ஊழியர்களின் விகிதங்களில் ஒன்றாகும். எனவே இது பெரிய சுமை இனி அதை செய்ய முடியாது என அவர் தெரிவித்தார். (நி)

# அதிகரிக்கும் வீதிவிபத்துகள் அவதானத்துடன் செயற்படுங்கள்

## 10 மாதங்களில் 1733 பேர் பலி என்கிறார் நிஹால் தல்துவ

(கொழும்பு)

கடந்த 10 மாதங்களில் 1,638 வீதி விபத்துக்கள் ஏற்பட்டுள்ளதாகவும் இந்த விபத்துகளினால் இது வரை 1,733 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் பொலிஸ்துறை ஊடகப் பேச்சாளர் மற்றும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு, விபத்துக்களில் அதிகமாக உயிரிழந்தவர்கள் பாதசாரிகள் எனவும் அந்த எண்ணிக்கை 540 எனவும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில். வீதி விபத்துக்களினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையை எடுத்துக் கொண்டால், 1,733 பேரில் 540 பேர் பாதசாரிகள் மற்றும் 543 மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்கள் உயிரிழந்துள்ளனர்.

எனவே, இவ்வாறு சாலையில் பயணிக்கும் இந்த அப்பாவி மக்கள் மீது கவனம் செலுத்துமாறு சாரதிகளை கேட்டுக் கொள்கிறோம்.




பாதசாரிகளின் அலட்சியத்தால் இந்த விபத்து நேர்ந்துள்ளது.

எனவே, பாதசாரிகளாகிய நீங்கள் சாலையில் செல்லும் போதும் கவனமாக இருக்கவும் எனவும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிய விளையாட்டு கிரிக்கெட் போட்டி பங்களாதேஷ் வெண்கல பதக்கம் வென்றது



ஆசிய விளையாட்டு கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தானுக்கு அதிர்ச்சி அளித்து பங்களாதேஷ் வெண்கலம் வென்று அசத்தியது.

ஆசிய விளையாட்டு கிரிக்கெட்டில் நேற்று முன்தினம் நடைபெற்ற வெண்கலப்பதக்கத்துக்கான போட்டியில் பாகிஸ்தான்-பங்களாதேஷ் அணிகள் மோதின.

இந்தப் போட்டியில் டாஸ் வென்ற பங்களாதேஷ் பந்து வீச்சை தேர்வு செய்தது. மழையால் ஆட்டம் தாமதமாக தொடங்கியது. முதலில் பட்டிங் செய்த பாகிஸ்தான் 5 ஓவரில் ஒரு விக்கெட் இழப்புக்கு 48 ரன்கள் எடுத்திருந்த போது மழை மீண்டும் குறுக்கிட்டதால் ஆட்டம் நிறுத்தப்பட்டது.

தொடர்ந்து மழை பெய்ததால் டக்வொர்த் லூயிஸ் முறைப்படி பங்களாதேஷ் 5 ஓவரில் 65 ரன்கள் எடுக்க வேண்டும் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.

இதையடுத்து, ஆடிய பங்களாதேஷ் 5 ஆவது ஓவரின் கடைசிப் பந்தில் பவுண்டரி அடித்து திரில் வெற்றி பெற்றது. இதன் மூலம் பங்களாதேஷ் அணி ஆசிய கிரிக்கெட் போட்டியில் வெண்கலப் பதக்கத்தைக் கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது. ( நி-6)

# டெண்டுல்கரின் சாதனையை முறியடித்த டேவிட் வார்னர்



இந்திய கிரிக்கெட் அணி ஜாம்பவான் சச்சின் டெண்டுலகரின் உலகக்கிண்ண சாதனையை டேவிட் வார்னர் தகர்த்தார்.

உலகக்கிண்ண தொடரின் நேற்றைய போட்டியில் இந்தியா - அவுஸ்திரேலியா அணிகள் மோதின.

சென்னையில் தொடங்கிய இப்போட்டியில் நாணய சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலியா துடுப்பாட்டத்தை துவங்கியது.

இந்தப் போட்டியில் டேவிட் வார்னர் 2 ஆவது பவுண்டரியை அடித்தபோது உலகக் கிண்ணத்தில் அதிவேகமாக 1,000 ஓட்டங்கள் குவித்து புதிய சாதனையை படைத்தார்.

இந்திய ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கர் மற்றும் ஏபி டிவில்லியர்ஸ் இருவரும் 20 இன்னிங்ஸ்களில் எடுத்த ஸ்கோரை, வார்னர் 19 இன்னிங்ஸ்களிலேயே எடுத்து தகர்த்துள்ளார்.

அத்துடன் அதிக ஓட்டங்கள் எடுத்த அவுஸ்திரேலிய வீரர்கள் பட்டியலில், டேவிட் வார்னர் 4 ஆவது இடத்திற்கு முன்னேறி இருக்கிறார்.

முன்னாள் கப்டன் ரிக்கி பாண்டிங் (1,743), ஆடம் கில்கிறிஸ்ட் (1,085), மார்க் வாக் (1,004) ஆகியோர் உலகக் கிண்ண போட்டியில், 1000 ஓட்டங்களை கடந்த அவுஸ்திரேலிய வீரர்கள் ஆவர்.

மேலும் உலகக்கிண்ணப் போட்டியில் அதிவேக 1000 ஓட்டங்கள் கடந்த வீரர்களாக, டேவிட் வார்னர் - 19 இன்னிங்ஸ், சச்சின் டெண்டுல்கர் / ஏபி டி வில்லியர்ஸ் - 20 இன்னிங்ஸ், விவியன் ரிச்சர்ட்ஸ் / சவுரவ் கங்குலி - 21இன்னிங்ஸ், மார்க் வாக் - 22 இன்னிங்ஸ், ஹெர்ஸ்செல்லே கிப்ஸ் - 22 இன்னிங்ஸ் ஆகியோர் உள்ளனர். (6)

# ஆசிய விளையாட்டில் இந்தியாவுக்கு 100 பதக்கங்கள்

2023 ஆம் ஆண்டு ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் இந்தியா 100 பதக்கங்களை கைப்பற்றி சாதனை படைத்துள்ளது.

சீனாவில் நடந்து வரும் ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் 45 நாடுகளைச் சேர்ந்த வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ளனர்.

அத்துடன் முதல்முறையாக 100 பதக்கங்களை வென்று வரலாற்று சாதனை படைத்துள்ளது.

இதில் 25 தங்கம், 35 வெள்ளி, 40 வெண்கலப் பதக்கங்கள் அடங்கும்.

இதன்மூலம் இந்தியா பதக்கப் பட்டியலில் 4 ஆவது இடத்தில் நீடிக்கிறது.

சீனா 358 பதக்கங்களுடன் (188 தங்கம்) முதல் இடத்திலும் ஜப்பான் 170 பதக்கங்களுடன் (47 தங்கம்) இரண்டாவது இடத்திலும் தென்கொரியா 171 பதக்கங்களுடன் (36 தங்கம்) மூன்றாவது இடத்திலும் உள்ளன. (நி-6)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2933

### ராஜ்

காலையில இருந்து ஒரே கை, கால் வலிங்க. கொஞ்சநேரமா தலைவலி வேற.




உப்புமா பண்ணிருக்கேன்னு நேரடியா சொல்லு.

### குயின்சி



தயவு செஞ்சு தியேட்டர்ல படம் பார்க்கும் போது சத்தம் போடாம பாருங்க.

நெட்ல பார்க்கும் போது ஒரே சத்தமா இருக்கு ஒன்னுமே புரியல.

### குரு




### டேவிற்




### மிதுனா




### பிரதீப்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆபத்தான மரங்களை அகற்றுமாறு பணிப்புரை

(கொழும்பு)

டிப்போ மற்றும் பேருந்து தரிப்பிடங்களுக்கு அருகில் ஆபத்து ஏற்படும் வகையிலுள்ள மரங்களை அகற்றுமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது.

அண்மையில் கொள்ளுப்பிட்டியில் பேருந்து ஒன்றின் மீது மரமொன்று முறிந்து வீழ்ந்த சம்பவத்தின் அடிப்படையில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக சபையின் தலைவர் லலித் டி அல்விஸ் குறிப்பிட்டுள்ளார். (நி)

# பிறப்பு, இறப்பு சான்றிதழ்களில் தவறு ஏற்படின் சட்டநடவடிக்கை

## அதிகாரிகளுக்கு அறிவுறுத்து

(கொழும்பு)

அதிகாரிகளின் கவனயீனம் காரணமாக பிறப்பு, இறப்பு மற்றும் மரண சான்றிதழ்களில் தவறுகள் ஏற்படும் பட்சத்தில், குறித்த அதிகாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு பதிவாளர் திணைக்கள அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

சான்றிதழ்களில் தவறுகள் ஏற்படுவதை தவிர்த்துக்கொள்ளுமாறு இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த தெரிவித்துள்ளார்.

உள்விவகார இராஜாங்க அமைச்சின் முன்னேற்ற கூட்டம் நேற்று முன்தினம் இடம்பெற்ற போதே இந்த ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் அதிகாரிகளின் கவனயீனம் காரணமாக அதிகளவில் தவறுகள் ஏற்பட்ட நிலையில், இந்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. (நி)


# மணிவிழா வாழ்த்தும் சேவைநலன் பாராட்டும்




திருமதி. கமலாம்பிகை லிங்கேஸ்வரன்

(பகுதித் தலைவர்)

ஆசிரியர் சேவை~ தரம் ~I

(கலைமாணி~பொருளியல், PGD in Education)

சேவை விபரம்

யா/யாழ்ற்ரன் கல்லூரி

1993.01.11–2012.01.18

யா/சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம்

2012.01.18–2021.04.01

யா/ காரைநகர் இந்துக் கல்லூரி

2021.04.05–2023.10.09

30 ஆண்டுகால ஆசிரியர் சேவையை இனிதே நிறைவு செய்து 2023.10.09 இன்று மணி விழாவைக் கொண்டாடுகின்ற மணிவிழா நாயகியை அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

[சி-7401]

வாழ்த்துவோர்~

ஆசிரியர் நலன்புரிக்கழகம், யா/காரைநகர் இந்துக் கல்லூரி.


# மாத்தறை கிரீட் உப மின் நிலையம் வெள்ளத்தில் மூழ்கும் அபாயம்

## அமைச்சர் காஞ்சன தெரிவிப்பு

(மாத்தறை)

பலத்த மழை காரணமாக நீர்மட்டம் உயர்வடைவதால் மாத்தறை மின்சார சபையின் கிரீட் உப மின் நிலையம் வெள்ளத்தில் மூழ்கும் அபாயம் காணப்படுவதாக மின்சக்தி - எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

இது குறித்து அமைச்சர் தமது டுவிட்டர் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

தேவையேற்படின், பாதுகாப்பு நடவடிக்கையாக மாத்தறை கிரீட் உப மின் நிலையத்தை பாதுகாப்பாக மூடுவதற்கு திட்டமிட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

தெனியாய மற்றும் பெலியத்த உப மின் நிலையங்களின் ஊடாக பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு மின் சாரத்தை வழங்க. மின்சார சபை திட்டமிட்டுள்ளதாகவும் உப நிலையங்கள் மூடப்பட்டதன் பின்னர் அங்கு பணிபுரியும் மின்சார சபை ஊழியர்களை பாதுகாப்பாக அழைத்து வருவதற்காக கடற்படையினரால் படகுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அமைச்சரின் டுவிட்டரில் பதிவிடப்பட்டுள்ளது. (நி)


# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் ஆசிரியர் திருமதி.ஷகீலா வசீகரன் அவர்களின் பாசமிகு மாமியார் திருமதி.

நகுலாம்பிகை வாமதேவன்

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(17309)

அதிபர், ஆசிரியர், கல்விசாரா ஊழியர், பாடசாலை நலன்புரி சங்கம், யா/ கோப்பாய் மகா வித்தியாலயம்.


# இராசிபலன்

09.10.2023
புரட்டாதி 22, திங்கட்கிழமை
தசமி பிற்பகல் 2.47 மணிவரை

ஆயிலியம் முழுவதும்
சுபநேரம் -12.02-1.32 மணிவரை
இராகுகாலம்-7.32-9.02 மணிவரை

சந்திராஷ்டமம்- பூராடம்

வளவன்




மேஷம்: தொட்ட காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், அழகு சாதனப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.



கடகம்: விருப்பங்கள் நிறைவேற வழிபாட்டை மேற்கொள்ள வேண்டிய நாள், பெரிய மனிதர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், கற்பனை மிகுதியான நாள்.



துலாம்: செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், சுப காரியங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.



மகரம்: பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், காரிய அனுகூலமுண்டு, கௌரவமிக்கவர்களின் சந்திப்பு இடம் பெறலாம்.



ரிஷபம்: தொழில் போட்டிகள் மாறும், விடா முயற்சிக்கு இன்று வெற்றி கிடைக்கும், உறவினர்கள் உங்கள் முன்னேற்றத்தில் அதிக அக்கறை காட்டுவர்.



சிம்மம்: வரவைக்காட்டிலும் விரையங்கள் மேலோங்கும் நாள், விருந்தினர்களின் வருகையால் சுப விரயங்கள் ஏற்படலாம், பாரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும்.



விருச்சிகம்: எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வீட்டு உபயோகப் பொருட்கள் வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, தித்திக்கும் பயணங்கள் இடம் பெறலாம்.



கும்பம்: குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்,. கடன் சுமை குறைய வழிவகை செய்வீர்கள், உற்சாகமான நாள், செய்தொழில் மேன்மையுண்டு.



மிதுனம்: கடினமான வேலைகளைக் கூட நயமாகப் பேசி முடித்துக் கொள்வீர்கள், வெளியூர்ப்பயணங்களால் ஆதாயம் உண்டு, நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும்.



கன்னி: குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலைகள் உருவாகும், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.



தனுசு: எதையும் ஒரு முறைக்குப் பல முறை யோசித்துச் செய்வது நல்லது கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், மனக்கவலை கூடும் நாள்.



மீனம்: புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும், நீண்ட நாட்களாக திட்டமிட்டிருந்த காரியம் இன்று கைகூடும், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள்.

முதியோர் இல்லத்திற்கு உன் பெற்றோரை மட்டும் கொடுத்துவிடாதே.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வீதியோரங்களில் குப்பை வீசுபவர்களுக்கு இளைஞர்கள் எச்சரிக்கை விடுப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - பிறவுண் வீதி, கலட்டிச் சந்தியை அண்மித்த, சனநடமாட்டம் அதிகமுள்ள புளியடிப் பகுதியில் அத்துமீறி குப்பைகளைக் கொண்டுவந்து போடுபவர்களை காணொளி பதிவினை ஆதாரத்துடன் சமூக வலைத்தளங்களில் வெளியிடவுள்ளதாக அப்பகுதி இளைஞர்கள் தெரிவித்தனர்.

யாழ்.பல்கலைக்கழக மாணவர் விடுதிகள், தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் யாழ். பல்கலைக்கழகக் கல்லூரி ஆகியவற்றை அண்மித்த இந்தப் பகுதி மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் அதிகமாக நடமாடும் இடமாகும். இந்தப் பகுதியில் அத்துமீறிக் குப்பைகளைக் கொட்டு பவர்களால் அந்தப் பகுதியில் வசிப்பவர்கள் மற்றும் போக்குவரத்தில் ஈடுபடுபவர்கள் மற்றும் பல்கலை மாணவர்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர்.

வாகனங்களில் வருவோர் குப்பைகளை குறித்த பகுதியில் தூக்கி எறிந்து விட்டு செல்வதால் கால்நடைகள், நாய்கள் அவற்றினை சேதப்படுத்தும் போது உணவு கழிவுகளைத் தவிர, துர்நாற்றமான பொருட்களையும் அதில் வீசி விட்டு போவதால் சுகாதாரச் சீர்கேடுகளை எதிர்நோக்க வேண்டி உள்ளது.

மேலும் இவ்வாறான செயற்பாடுகள் மேற்கொள்ளும் நபர்களை இனங்காண்பதற்காக காணொளி பதிவினை ஆதாரத்துடன் சமூக வலைத்தளங்களில் வெளியிடவுள்ளதாக அப்பகுதி இளைஞர்கள் தெரிவித்தனர். (நி-6-33)

# தனங்கிளப்பு பகுதியில் துப்பாக்கி,எறிகணை மீட்பு



(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தனங்கிளப்பு-அறுகுவெளிப் பகுதியில் உள்ள காணியொன்றில் துப்பாக்கி மற்றும் எறிகணை அடையாளம் காணப்பட்டுள்ளன.

அப்பகுதி ஊடாக கால்நடைகளை மேய்ச்சலுக்கு கொண்டு சென்ற நபரொருவரே வெடிபொருட்களை அடையாளம் கண்டு கிராம அலுவலர் ஊடாக பொலிஸாருக்கு நேற்று தகவல் வழங்கியுள்ளார்.

இதன்போது ரி-56ரக துப்பாக்கி ஒன்றும் எறிகணை ஒன்றும் அடையாளம் காணப்பட்டுள்ளன.

வெடிபொருட்களை மீட்பதற்கான நடவடிக்கைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (நி-6-30)



அச்சுவேலி மருத்துவமனைக்கு இரண்டு லட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்கள், ஆவரங்கால் சுபாஷ் ரிராவல்ஸின் குடும்பத் தலைவர் இ.லோகேஸ்வரனால் நேற்று முன்தினம் சனிக்கிழமை மருத்துவமனை பொறுப்பதிகாரியிடம் கையளிக்கப்பட்டது.

(படம்-சிவசாந்தன், கஜிந்தன்.)

# இலவச கருத்தரங்கு

(சாவகச்சேரி)

கைதடி-குமரநகர் வெளிநாட்டு ஒன்றியம் தரம்-5 புலமைப்பரிசில் மாணவர்களுக்காக முன்னெடுக்கும் இலவச கருத்தரங்கு இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2மணிக்கு யா/முத்துக்குமாரசுவாமி பாடசாலையின் பொதுமண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் வளவாளராக யா/மத்திய கல்லூரி ஆசிரியர் அசோக்குமார் மற்றும் சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை ஆசிரியர் சுபேசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

"வாழ்வோம் வாழவைப்போம்" எனும் கருத்திட்டத்தின் கீழ் குறித்த இலவச கருத்தரங்கு முன்னெடுக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-6-30)

# மழைவீழ்ச்சியை கவனத்திலெடுத்து பயிர்ச்செய்கையில் ஈடுபடுங்கள்

## புவியியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் பிரதீபராஜா

(யாழ்ப்பாணம்)

**இந்த ஆண்டு வட கீழ் பருவத்தில் நான்கு முதல் ஆறு தாழமுக்கங்கள் வங்காளா விரிகுடாவில் தோன்றும் வாய்ப்புள்ளதுடன் அதில் இரண்டு தாழமுக்கம் புயலாக மாறும் வாய்ப்பு உள்ளதால் விவசாயிகள் எதிர்வரும் 12 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் கிடைக்கும் மழையைப் பொறுத்து விதைப்புச் செய்கையில் ஈடுபடலாம் என யாழ். பல்கலைக்கழக புவியியற் துறை சிரேஷ்ர விரிவுரையாளர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்தார்.**

நீண்டகால நெல்லினங்களை விதைக்காது குறுங்கால விதையினங்களை விதைப்பதன் மூலம் 2024 ஆம் ஆண்டு ஜனவரிக்கு பின்னரான காலப் பகுதியில் நீர்ப்பாசன நீரை எதிர்பார்க்க தேவையில்லை.

இயலுமான வரை சேற்று விதைப்புக்கான பெருமழையை எதிர்பாராது புழுதி விதைப்புக்கான சந்தர்ப்பங்களை பயன்படுத்தல் வேண்டும். ஏனெனில் தற்போதே ஒரு கிலோ அரிசியின் விலை (ஆட்டக்காரி) 260 ரூபா ஆக உயர்வடைந்துள்ளமையை அவர் சுட்டிக்காட்டினார். (நி-6-33)

# தட்டுப்பாடின்றி உரங்களை விநியோகிக்க நடவடிக்கை

## விவசாய அமைச்சர் பணிப்புரை

(கொழும்பு)

21,000 மெற்றிக் தொன் யூரியா உரத்தை உடனடியாக விநியோகிக்க நடவடிக்கை எடுக்குமாறு விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர அரசாங்க உர நிறுவனங்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இலங்கை உர நிறுவனம் மற்றும் கொழும்பு கொமர்ஷல் உர நிறுவனம் இணைந்து 21,000 மெற்றிக் தொன் யூரியா உரத்தை இன்று முதல் விநியோகிக்க ஏற்பாடு செய்துள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த உரத்தை விவசாய சேவை நிலையங்களில் கொள்வனவு செய்ய முடியும் எனவும், 50 கிலோ யூரியா உரம் மூட்டை ஒன்றை 9000 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படவுள்ளது.

இந்த பருவத்தில் தட்டுப்பாடு இன்றி உரிய நேரத்தில் உரங்களை வழங்குவதற்கு அரசாங்கத்திற்கு சொந்தமான இரண்டு உர நிறுவனங்களும் தனியார் துறையும் இணைந்து ஏற்பாடுகளை செய்துள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

உங்கள் இல்லங்களில் இருந்தவாறே வலம்புரியில் விளம்பரம் செய்யும் வாய்ப்பு

அன்பு வாசகர்களே!

உங்கள் வீட்டில் இடம்பெறும் நிகழ்வுகள் மற்றும் வர்த்தக விளம்பரங்களை எவரின் உதவியுமின்றி உங்கள் வலம்புரியில் நேரடியாகப் பிரசுரிக்க முடியும்.

தொடர்புகளுக்கு:

தொலைபேசி:

076 097 3127

021 221 7603

Viber/ Whatsapp: 076 636 3378

E.mail: Valampurii@yahoo.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராகுகேது பெயர்ச்சிப் பலன்கள்

## 08.10.2023-25.04.2025

## மனப் போராட்டம் அகல நண்பர்கள் வழிகாட்டுவர்!

ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்



**மேஷ இராசி வாசகர்களே!**

இதுவரை உங்கள் இராசியிலேயே சஞ்சரித்து வந்த ராகு பகவான் ஒக்டோபர் 8 ஆம் திகதி முதல் உங்கள் இராசிக்கு 12 ஆம் இடத்தில் சஞ்சரிக்கப் போகிறார். அதேநேரத்தில் கேது 6 ஆம் இடத்திற்கு வருகிறார். ஜென்மத்தை விட்டுப் பாம்புக் கிரகம் விலகும்போது நல்ல பலன்களை வழங்கும் என்பது ஜோதிட நியதி. சுமார் ஒன்றரை ஆண்டு காலம் ராகுவும் கேதுவும் அந்த இடத்திலேயே சஞ்சரித்து அவை செல்லும் நட்சத்திரப் பாதசாரங்களுக்கு ஏற்ப பலன்களை வழங்குவார்கள்.

உங்கள் இராசிக்கு 12 ஆம் இடத்தை "பயண ஸ்தானம்" என்றும் "விரய ஸ்தானம்" என்றும் சொல்வது வழக்கம். எனவே இடமாற்றம், வீடு மாற்றம் ஒரு சிலருக்கு உத்தியோகத்தில் இலாகா மாற்றம் ஏற்படலாம். சிலருக்கு பதவி உயர்வு கிடைக்கும். சென்ற ராகு கேது பெயர்ச்சியில் உலுக்கி எடுத்த பிரச்சினைகள் இனி ஒவ்வொன்றாக மாறும். மனப்போராட்டம் அகல நண்பர்கள் வழிகாட்டுவர். பணப்பிரச்சினை தீரும். செலவிற்கேற்ற வரவு வந்து கொண்டேயிருக்கும். வாகன யோகம் உண்டு.

6 ஆம் இடத்தில் கேது சஞ்சரிப்பதால் எதிரிகள் உதிரிகளாவர். உடல்நலம் சீராக மாற்று மருத்துவம் கைகொடுக்கும். உத்தியோகத்தில் உயர் அதிகாரிகளின் மனதில் இடம்பிடிப்பீர்கள். சர்ப்ப தோஷ நிவர்த்திக்குரிய பரிகாரங்களை யோக பலம் பெற்ற நாளில் செய்து கொள்வது நல்லது.

**குரு மற்றும் சனி வக்கிர காலம்**

8.10.2023 முதல் 20.12.2023 வரை மேஷ இராசியிலும் 25.9.2024 முதல் 22.1.2025 வரை ரிஷப இராசியிலும் குரு வக்கிரம் பெறுகிறார். அவர் வக்கிரம் பெறும் காலங்களில் உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்காது. வீண் விரயங்கள் உண்டு. வீடு மாற்றம் உத்தியோக மாற்றம் திருப்தி தராது.

8.10.2023 முதல் 24.10.2023 வரை மகர இராசியிலும் 10.7.2024 முதல் 5.11.2024 வரை கும்ப இராசியிலும் சனி வக்கிரம் பெறுகிறார். அவர் வக்கிரம் பெறும் காலங்களில் சஞ்சலங்கள் அதிகரிக்கும். எதிரிகளின் பலம் கூடும். மருத்துவச் செலவு பெருகும். பொதுவாழ்வில் வீண்பழி ஏற்படும். சொந்தபந்தங்களின் அரவணைப்பு குறையும்.

**சனிப்பெயர்ச்சி காலம்**

20.12.2023 அன்று கும்ப இராசிக்கு சனி பகவான் செல்கிறார். அவர் உங்கள் இராசிக்கு லாப ஸ்தானத்திற்கு வருவதால் பொருளாதாரத்தில் உச்சம் தொடுவீர்கள். நினைத்த காரியத்தை நினைத்தபடி செய்வீர்கள். வளர்ச்சியில் இருந்த




குறுக்கீடு அகலும். தொழிலில் புதிய பங்குதாரர்களால் லாபம் பெருகும். கூட்டுத் தொழிலில் இருந்து விலகி தனித்து இயங்கும் வாய்ப்பு உருவாகும். உத்தியோகத்தில் உள்ளவர்கள் வெளிநாட்டு அழைப்புகளை ஏற்கலாமா? என்று யோசிப்பீர்கள்.

**குருப்பெயர்ச்சி காலம்**

1.5.2024 அன்று ரிஷப இராசிக்கு குரு செல்கிறார். அப்போது குருவின் பார்வை உங்கள் இராசிக்கு 6, 8, 10 ஆகிய மூன்று இடங்களில் பதிகிறது. எனவே எதிர்ப்பு, வியாதி, கடன் ஆகியவற்றில் இருந்து நிவாரணம் கிடைக்கும். எதிர்காலத்தைப் பற்றிய பயம் அகலும். துடிப்போடு செயற்பட்டு அடிப்படை வசதிகளைப் பெருக்கிக் கொள்வீர்கள். புனிதப் பயணங்கள் அதிகரிக்கும். புதிய தொழில் தொடங்கும் திட்டத்தை செயற்படுத்துவீர்கள்.

**பெண்களுக்கான பலன்கள்**

இந்த ராகு-கேது பெயர்ச்சியின் விளைவாக சுபச்செலவுகள் அதிகரிக்கும். பணப்பற்றாக்குறை ஏற்பட்டாலும் அதைச் சமாளிக்கும் ஆற்றல் உங்களுக்கு உண்டு. கணவன் - மனைவி ஒற்றுமை பலப்படும். பிள்ளைகளின் வளர்ச்சி பெருமைப்படும் வகையில் அமையும். வீடு கட்டுவது, கட்டிய வீட்டைப் பழுது பார்ப்பதில் கவனம் செலுத்துவீர்கள்.

**வளர்ச்சி தரும் வழிபாடு**

விரய ராகுவாலும் 6 ஆம் இடத்து கேதுவாலும் திருப்பங்கள் நிறைவேறவும் நல்ல திருப்பங்கள் உருவாகவும் சர்ப்ப சாந்திப் பரிகாரங்களை மேற்கொள்வதோடு யோகபலம் பெற்ற நாளில் பைரவரை வழிபட்டு வாருங்கள்.

## வியாபாரத்தில் ஏற்பட்ட சரிவை ஈடு செய்வீர்கள்!



**ரிஷப இராசி வாசகர்களே!**

இதுவரை உங்கள் இராசிக்கு 12 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த ராகு பகவான், ஒக்டோபர் 8 ஆம் திகதி முதல் உங்கள் இராசிக்கு 11 ஆம் இடமான லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கப் போகிறார். அதேநேரம் கேது பகவான் உங்கள் இராசிக்கு 5 ஆம் இடமான பூர்வ புண்ணிய ஸ்தானத்திற்கு வருகிறார். சுமார் ஒன்றரை ஆண்டு காலம் ராகுவும் கேதுவும் அந்த இடத்திலேயே சஞ்சரித்து அங்குள்ள நட்சத்திரப் பாதசாரங்களுக்கு ஏற்ப பலன்களை வழங்குவார்கள்.

11 ஆம் இடமான லாப ஸ்தானத்திற்கு வரும் ராகு, உங்களின் பணத் தேவையை உடனுக்குடன் பூர்த்தி செய்வார். அதனால் வியாபாரத்தில் ஏற்பட்ட சரிவை ஈடுகட்டுவீர்கள். தொழிலை விரிவுபடுத்தும் முயற்சிக்கு கடனுதவி கிடைக்கும். பிள்ளைகளாலும் உதிரி வருமானம் வரும். "தொழில் கூட்டாளிகளை விலக்கிவிட்டு தனித்து இயங்கலாமா?" என்று சிந்திப்பீர்கள். புதிய ஒப்பந்தங்கள் அடுக்கடுக்காக வந்து சேரும்.

பஞ்சம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் கேதுவால் ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். குலதெய்வ வழிபாட்டில் கவனம் செலுத்துவீர்கள். பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியும். பூர்வீகச் சொத்துக்களில் ஒரு பகுதியை விற்று விட்டு, புதிய சொத்துக்கள் வாங்கி அதை விரிவு செய்வீர்கள்.


**குரு மற்றும் சனி வக்கிர காலம்**

8.10.2023 முதல் 20.12.2023 வரை மேஷ இராசியிலும் 25.9.2024 முதல் 22.1.2025 வரை ரிஷப இராசியிலும் குரு வக்கிரம் பெறுகிறார். அஷ்டம-லாபாதிபதியான குரு வக்கிரம் பெறும்பொழுது நன்மையும் தீமையும் கலந்தே நடைபெறும். இழப்புகளை ஈடுசெய்ய புதிய வாய்ப்புகள் வந்துசேரும். வீடு மாற்றம் இனிமை தரும். வெளிநாட்டில் இருந்து அனுகூலத் தகவல் வரும். ஒரு சிலருக்கு பணி நிரந்தரம் ஆகும்.

8.10.2023 முதல் 24.10.2023 வரை மகர இராசியிலும் 10.7.2024 முதல் 5.11.2024 வரை கும்ப இராசியிலும் சனி வக்கிரம் பெறுகிறார். அவர் வக்கிரம் பெறும் காலங்களில் மனக் குழப்பம் அதிகரிக்கும். தொழிலில் குறுக்கீடு சக்திகளால் நெருக்கடிகள் கூடும். பணப் பொறுப்பு பகையை வளர்க்கலாம். குடும்பத்தில் மருத்துவச் செலவு கூடும். மறைமுக எதிர்ப்பை சமாளிக்க வேண்டியதிருக்கும்.

**சனிப்பெயர்ச்சி காலம்**

20.12.2023 அன்று கும்ப இராசிக்கு




சனி பகவான் செல்கிறார். இந்தப் பெயர்ச்சி உங்களுக்கு சாதகமாகவே அமையும். தடைப்பட்ட காரியங்கள் தானாக நடைபெறும். தொழில் முன்னேற்றம் திருப்தி தரும். பெற்றோர் உடல்நலனில் கவனம் தேவை.

அசையா சொத்து வாங்குவதில் ஆர்வம் கூடும். பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு புதிய பொறுப்பு கிடைக்கும். பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும்.

**குருப்பெயர்ச்சி காலம்**

1.5.2024 அன்று உங்கள் இராசிக்கு குரு பகவான் வருகிறார். அப்பொழுது அவரது பார்வை 5, 7, 9 ஆகிய இடங்களில் பதிகின்றது. உங்கள் இராசிநாதன் சுக்கிரனுக்கு, குரு பகவான் பகை கிரகம் என்றாலும் குரு பகவானின் பார்வைக்கு பலன் உண்டு. அந்த வகையில் பிள்ளைகளின் சுபகாரியம் நடைபெறும். பாகப்பிரிவினை சுமுகமாக முடியும். பிரிந்த தம்பதியர் ஒன்றுசேர வழிபிறக்கும். தொழிலில் எதிர்பார்த்த லாபம் உண்டு.

**பெண்களுக்கான பலன்கள்**

ராகு-கேது பெயர்ச்சியின் விளைவாக நல்ல காரியங்கள் இல்லத்தில் நடைபெறும். செல்வநிலை உயரும். கணவன் - மனைவி ஒற்றுமை பலப்படும். பெற்றோர் உடல்நலனில் கவனம் தேவை. வாரிசுகளின் வளர்ச்சி மகிழ்ச்சி தரும். சனி வக்கிர காலத்தில் கூடுதல் கவனம் தேவை. பணிபுரியும் பெண்களுக்கு பதவி உயர்வு உண்டு.

**வ்ளர்ச்சி தரும் வழிபாடு**

லாப ஸ்தானத்திற்கு வரும் ராகுவால் செல்வநிலை உயரவும் பஞ்சம ஸ்தானத்திற்கு வரும் கேதுவால் பணியில் இருந்த தொய்வு அகலவும். சர்ப்ப சாந்திப் பரிகாரங்களைச் செய்து கொள்ளுங்கள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## பட்டாசு ஆலையில் வெடி விபத்து

### தமிழகத்தை சேர்ந்த 13 பேர் உயிரிழப்பு

(சென்னை)

தமிழக எல்லையில் (அத்திப்பள்ளியில்) பட்டாசு குடோனில் ஏற்பட்ட வெடி விபத்தில் தமிழர்கள் 13 பேர் உயிரிழந்துள்ளனர்.


வாகனத்தில் இருந்து பட்டாசு பெட்டிகளை இறக்கிக் கொண்டிருக்கும் போது இந்த எதிர்பாரா விபத்து ஏற்பட்டுள்ளது.

பெங்களூர் நகர்ப்புற மாவட்டம் கர்நாடக - தமிழக எல்லையில் உள்ள அத்திப்பள்ளியில் உள்ள பட்டாசு குடோனில் நேற்று முன்தினம் மாலை திடீரென வெடிவிபத்து ஏற்பட்டது.

தீபாவளி பண்டிகைக்காக குடோனில் பல லட்சம் மதிப்பிலான பட்டாசுகள் வைக்கப்பட்டிருந்த நிலையில் தீ விபத்து கட்டுப்படுத்த முடியவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

9 தீயணைப்பு வாகனங்கள் தீயை அணைக்க போராடின. இந்த தீ விபத்தில் சிக்கி இதுவரை 13 பேர் பலியாகி இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இவர்கள் அனைவரும் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள். தீ விபத்து காரணமாக அப்பகுதி முழுவதுமாக புகை மூட்டமாக காணப்பட்டது. (நி)



## இந்தியா-கனடா மோதலைக் குறைக்க இங்கிலாந்து ஆலோசனை

(லண்டன்)

இந்தியாவுடனான மோதல் போக்கை தவிர்க்குமாறு கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவை. இங்கிலாந்து பிரதமர் ரிஷி சுனக் கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்தியா மீது குற்றம் சாட்டிய விவகாரத்தில் அமெரிக்கா, இங்கிலாந்து உள்ளிட்ட நாடுகள் கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவுக்கு ஆதரவு அளிக்க மறுத்துவிட்டன.

இந்நிலையில், இங்கிலாந்து பிரதமர் ரிஷி சுனக், கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவை தொலை பேசியில் தொடர்புகொண்டு பேசி உள்ளார்.

இதையடுத்து, இங்கிலாந்து பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்தியாவில் உள்ள கனடா தூதரக அதிகாரிகளின் நிலை தொடர்பாக பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ விளக்கினார். அப்போது ஒவ்வொரு நாடும் மற்ற நாடுகளின் இறையாண்மையையும் சட்டத்தின் ஆட்சியையும் மதிக்க வேண்டும் என்றும் வியன்னா தீர்மானங்களை ஒவ்வொரு நாடும் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

தற்போதுள்ள நிலை தணியும் என்று நம்பிக்கை தெரிவித்த பிரதமர் ரிஷி சுனக்அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பாக கனடா பிரதமரை தொடர்பு கொள்வதாக பிரதமர் ரிஷி சுனக் உறுதி அளித்தார். (நி)



## குண்டு மழை... ஆரம்பித்தது...

### இரு தரப்பிலும் 480 பேர்...



(ஜெருசலேம்) —

இஸ்ரேல் மீது ஹமா...
இஸ்ரேல் பதிலடி தாக்...
காசா மீது குண்டுமழை...

இந்த பதில் தாக்குதலில் 230 இற்கும் மேற்பட்ட காசா மக்கள் கொல்லப்பட்டுள்ளதாகவும், ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளதாகவும் அங்குள்ள அதிகாரிகள் தெரிவித்தனர்.

இஸ்ரேல், ஹமாஸ் குழுவினரின் மறைவிடங்களையே குறிவைத்து தாக்கி வருவதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

காஸா முழுவதும் உள்ள ஏழு வெவ்வேறு பகுதிகளில் வசிப்பவர்களை தங்கள் வீடுகளை விட்டு வெளியேறி நகர மையங்களுக்குச் செல்லுமாறு அல்லது தங்குமிடங்களில் தஞ்சம் அடையுமாறு இஸ்ரேலிய இராணுவம் கேட்டுக் கொண்டுள்ளது.

பல குடும்பங்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறி ஐ.நா நடத்தும் பள்ளிகளில் தஞ்சம் புகுந்ததாக அங்கிருப்பவர்கள் தெரிவித்தனர்.

இஸ்ரேலிய படைகளுக்கும் நூற்றுக்கணக்கான ஹமாஸ் ஆய்ஹதக் குழுவினரும் இடையே குறைந்தது 22 இடங்களில் துப்பாக்கிச் சண்டைகள் நடந்துள்ளன.

யோம் கிப்பூர் போருக்குப் பிறகு இஸ்ரேலில் நடந்த வன்முறையிலேயே மிக மோசமான வன்முறையை நிகழ்த்தி, பணயக் கைதிகள் எல்லையைத் தாண்டி காசாவிற்குள் கொண்டு செல்லப்பட்டனர்.

ஹமாஸின் தரை, வான் மற்றும் கடல் தாக்குதலைத் தொடர்ந்து குறைந்தது 250 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது. 1,000இற்கும் மேற்பட்ட மக்கள் காயமடைந்துள்ளனர். அதோடு கூடுதலாக 3,000 இற்கும் மேற்பட்ட ராக்கெட்டுகள் இஸ்ரேலிய எல்லைக்குள் ஏவப்பட்டதாக இஸ்ரேலிய இராணுவம் தெரிவித்துள்ளது.

பதிலடி தாக்குதல்களு டன் இஸ்ரேல் பதிலடி கொடுத்ததில் 230இற்கும் மேற்பட்ட காசா மக்களும் கொல்லப்பட்டதாக காசா அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



இ...
அவி...
முக்...
அ...
வீசி...
யுள்...
இ...

## மின்சார விநியோகம் துண்டிப்பு இருளில் மூழ்கிய காசா

(ஜெருசலேம்)

இஸ்ரேல் காசாவிற்கான எரிபொருள் மின்சாரப் பொருட்கள் விநியோகத்தை துண்டிக்க வுள்ளதாக இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெட்டன்யாகு அறிவித்துள்ளார்.

இஸ்ரேலிய அதிகாரிகள் ஏற்கனவே மின் விநியோகத்தை துண்டித்துள்ளதால் காசா இருளில் மூழ்கியுள்ளது.

2007 முதல் பாதுகாப்பு காரணங்களிற்காக இஸ்ரேலும் எகிப்தும் காசா மீது தடைகளை விதித்துள்ளன.



இஸ்ரேல் காசாவின் வான்வெளிப் பாதையை தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்துள்ளது.

மேலும் எல்லை ஊடாக எவ்வாறான பொருட்களை எடுத்துச் செல்லவேண்டும் என்பதையும் தீர்மானிக்கின்றது. (நி)

## யத...

(ஜெ...
இ...
உடன...
பலத்...
ஹமா...
பிரத...
யாகு...
ஹ...
இஸ்...
இருக்...
தெரி...
இ...
ஆண்...
யாதா...
றியன...
ரேலி...
யோ...
ரைத்...
மு...
அது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ..ழையை பொழிய ..து இஸ்ரேல்!

## ..ர் பலி, 2000 பேர் காயம்

..ஹமாஸ் திடீரென நடத்திய ராக்கெட் தாக்குதலைத் தொடர்ந்து ..தாக்குதலைத் தொடங்கியுள்ளது. இஸ்ரேல் விமானப்படைகள் ..மழை பொழிய தொடங்கியுள்ளது.



இஸ்ரேல் தலைநகர் டெல் அவிவ் உட்பட அந் நாட்டின் முக்கிய பகுதிகள் மீது ஹமாஸ் அமைப்பு ராக்கெட்டுகளை வீசி திடீர் தாக்குதல் நடத்தியுள்ளது

இஸ்ரேல் - பாலத்தீனம் இடையே நூறாண்டுகளுக்கும் மேலாக பிரச்னை நீடித்து வருகிறது. இதனால், அங்கே குண்டுவெடிப்புகளும், துப்பாக்கிச் சூடுகளும் அன்றாட நிகழ்வுகளாகிவிட்டன.

எனினும், 2021ஆம் ஆண்டு இஸ்ரேல் - ஹமாஸ் இடையிலான 11 நாள் போருக்குப் பிறகு ஒப்பீட்டளவில் பெரிய அளவில் அங்கே மோதல்கள் நடக்கவில்லை. அதற்கு ஹமாஸ் அமைப்பு முற்றுப் புள்ளி வைத்துள்ளது.

இஸ்ரேல் தலைநகர் டெல் அவிவ் உட்பட அந் நாட்டின் முக்கிய பகுதிகள் மீது ஹமாஸ் அமைப்பு ராக்கெட்டுகளை வீசி திடீர் தாக்குதல் நடத்தியுள்ளது.

இருபதே நிமிடங்களில் 5 ஆயிரம் ராக்கெட்டுகளை வீசி ஹமாஸ் தாக்குதல் நடத்தியதில் இஸ்ரேலின் பல கட்டடங்கள் தீப்பிடித்து எரிகின்றன. இதில், 40 பேர் கொல்லப்பட்டதாகவும், 740 பேர் காயமடைந்திருப்பதாகவும் இஸ்ரேல் உறுதிப்படுத்தியுள்ளது. (நி)

# ..யதார்த்தத்தை மாற்றியமைப்போம்- இஸ்ரேல் சூளுரை

## இஸ்ரேல் சூளுரை

(ஜெருசலேம்)

இஸ்ரேல் இராணுவம் உடனடியாக தனது முழுப் பலத்தையும் பயன்படுத்தி ஹமாஸை அழிக்கும் என பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அறிவித்துள்ளார்.

ஹமாஸுக்கு எதிரான இஸ்ரேலின் போர் கடினமாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை அடுத்த 50 ஆண்டுகளுக்கான காசாவின் யாதார்த்தத்தை மாற்றியமைப்போம் என இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் யோவ் கேலன்ட் சூளுரைத்துள்ளார்.

முன்பு என்ன இருந்ததோ, அது இனி இருக்காது எனவும்



அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் தாங்கள் முழுப் பலத்துடன் செயற்பட உள்ளதாகவும் என்றும் இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் யோவ் கேலன்ட் தெரிவித்துள்ளார். (நி)

# ஆப்கானிஸ்தானில் நிலநடுக்கங்கள்

- 14 பேர் உயிரிழப்பு
- சுமார் 78 பேர் வரை படுகாயம்



(காபூல்)

ஆப்கானிஸ்தானில் அடுத்தடுத்ததாக 3 நிலநடுக்கங்கள் ஏற்பட்டுள்ளது என சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

நேற்று முன்தினம் ஆப்கானிஸ்தானின் ஹெராத் பகுதியில் சனிக்கிழமை வடமேற்கே 40 கிலோமீற்றர் தொலைவில் 6.3 ரிக்டர் அளவில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலநடுக்கங்களால் 14 பேர் உயிரிழந்துள்ளதுடன், 78 பேர் வரையில் படுகாயமடைந்துள்ளனர்.

குறித்த நிலநடுக்கங்கள் காரணமாக பல கட்டடங்கள் இடிந்து வீழ்ந்துள்ளதோடு மக்கள் வீடுகளில் இருந்து வெளியேறி வீதிகளுக்கு வந்துள்ளதால், போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# அந்தமான் நிக்கோபார் பகுதியில் நிலநடுக்கம்

அந்தமான் நிக்கோபார் தீவுகள் பகுதியில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

குறித்த நிலநடுக்கமானது, நேற்று அதிகாலை 3.20 மணியளவில் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலநடுக்கமானது 4.3 ரிக்டர் அளவில் பதிவாகியுள்ளது. இதனால் எந்தவிதமான சேதங்களும் இதுவரையில் பதிவாகவில்லை.

6 ரிக்டர் அளவுக்கும் குறைவான அளவில் நிலநடுக்கம் பதிவு செய்யப்பட்டதால் பாதிப்பு ஏற்படுவதற்கான வாய்ப்புகள் குறைவு என தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# மோடியை கொலை செய்ய சதி

## எச்சரித்த தேசிய புலனாய்வு துறை

(டில்லி)

திகார் சிறையில் இருக்கும் தாதா லாரன்ஸ் பிஷ்னாயை விடுவித்து ரூ.500 கோடி தராவிட்டால் பிரதமர் மோடியை படுகொலை செய்வோம், நரேந்திர மோடி ஸ்டேடியத்தை குண்டு வைத்து தகர்ப்போம் என இ-மெயில் மூலம் மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது குறித்து மும்பை காவல் துறை மற்றும் பாதுகாப்பு பிரிவுகளுக்கு தேசிய புலனாய்வு துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

லாரன்ஸ் பிஷ்னாய் கடந்த 2014ஆம் ஆண்டு முதல் டில்லி திகார் சிறையில் உள்ளார். அவர் ரவுடி கும்பலை சிறையில் இருந்து கொண்டே செயற்படுத்துகிறார். இவர் மீது கொலை உட்பட பல வழக்குகள் உள்ளன. பஞ்சாப் பாடகர் சித்து மூசே வாலா கடந்தாண்டு



கொலை செய்யப்பட்டதற்கு லாரன்ஸ் பிஷ்ணாய் பொறுப்பேற்றார்.

இவர் இதற்கு முன்பும் அச்சுறுத்தல் விடுத்துள்ளார். மான் வேட்டையில் ஈடுபட்ட பாலிவுட் நடிகர் சல்மான் கான் மீது, தனது சமூகத்தினர் கோபமாக இருப்பதால், அவரை படுகொலை செய்வோம் என இவர் முன்பு மிரட்டல் விடுத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. 0

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லையில் நீதிக்கான கண்டனப் பேரணி இன்று

(நெளுக்குளம்)

நீதிக்கான மாபெரும் கண்டனப் பேரணி இன்று காலை 9 மணியளவில் முல்லைத்தீவு சுனாமி நினைவாலயத்திற்கு முன்பாக இடம்பெறவுள்ளதாக போராட்டத்திற்கு முல்லை இளைஞர்களால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

நீதிக்கான கண்டன ஆர்ப்பாட்ட பேரணியானது சுனாமி நினைவாலயத்திற்கு முன்பாக ஆரம்பமாகி அங்கிருந்து முல்லை மாவட்ட செயலகம் வரை சென்று மாவட்ட செயலாளர் ஊடாக நிதி அமைச்சரின் செயலாளருக்கு மகஜர் கையளிக்கப்பட உள்ளது.

நீதியை எதிர்பார்த்து இளைஞர்களால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஆர்ப்பாட்டத்திற்கு வடமாகாண அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், பொதுஅமைப்புக்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொள்ளுமாறு இளைஞர்களால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (நி-5-299)

# தலைமன்னார் - தனுஷ்கோடி வரை நீந்தி சாதனை படைத்த மாற்றுத்திறனாளி சிறுவன்



(மன்னார்)

ஆட்டிசம் மற்றும் பேசும் திறன் குறைபாடு உள்ள சிறுவன் இலங்கை தலைமன்னாரில் இருந்து தனுஷ்கோடி வரையிலான பாக் ஜலசந்தி கடலை நீந்திக் கடந்து சாதனை படைத்துள்ளார்.

சென்னையைச் சேர்ந்த ஹரேஷ் பரத் மோகன் ஆட்டிசம் மற்றும் பேசும் திறன் குறைபாடு உள்ள மாற்றுத்திறனாளி. பெற்றோர் மகனை நீச்சல் துறையில் சாதிக்க வேண்டும் என்ற நோக்கில் சிறு வயது முதல் நீச்சல் பயிற்சியை முறையாக கற்றுக் கொடுக்கத் தொடங்கினர்.

இந் நிலையில் தலைமன்னாரில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு 11.37 மணியளவில் கடலில் குதித்து நீந்த தொடங்கி நேற்று முன்தினம் சனிக்கிழமை பிற்பகல் 11.29 மணி அளவில் 11 மணி நேரம் 52 நிமிடம் ஹரேஷ் பரத் மோகன் நீந்தி தனுஷ்கோடி அரிச்சல் முனையை வந்தடைந்தார்.

இதனையடுத்து தாய் கண்ணீர் மல்க முத்தமிட்ட தனை தொடர்ந்து சுங்கதுறை கண்காணிப்பாளர் சம்பத், மரைன் இன்ஸ்பெக்டர் கனகராஜ் உள்ளிட்டோர் வரவேற்றனர். (நி-6-285)

# மன்னாரில் இடம்பெற்ற கலை பண்பாட்டு பெருவிழா



(மன்னார்)

வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் அனுசரணையுடன், மன்னார் மாவட்டச் செயலகமும், மாவட்ட கலை பண்பாட்டு பேரவையும் இணைந்து ஏற்பாடு செய்த மன்னார் மாவட்ட கலை பண்பாட்டு பெருவிழா கடந்த வெள்ளிக்கிழமை மாலை மன்னார் மாவட்டச் செயலக மண்டபத்தில் இடம்பெற்றது.

மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஜே.பரந்தாமன் தலைமையில் இடம் பெற்ற மாவட்ட கலை பண்பாட்டு பெருவிழாவில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன்.சிறப்பு விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சின் பிரதி பணிப்பாளர் திருமதி லா.நிருபராஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து பல்வேறு நிகழ்வுகள் இடம் பெற்றதோடு, கலைஞர்களுக்கு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (நி-6-285)

# பொதுக் கூட்டம்

(கரணவாய்)

புலோலி தென்மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் எதிர்வரும் 14 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கந்த முருகேசனார் சனசமூக நிலைய முன்பள்ளி மண்டபத்தில் சங்கத்தலைவர் மு.ஜெகதேவன் (ஜே.பி) தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பருத்தித்துறை பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் க.வாசு தேவன் கலந்து கொள்ளவுள்ளார். (5-6-60)

# மன்றில் பாரப்படுத்திய கஞ்சா பொதி மாயம்

## ஊழியர்கள் 3 பேருக்கு பயணத்தடை

(முறிகண்டி)

கிளிநொச்சி நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டு பாதுகாப்பறையில் வைக்கப்பட்ட 120 கிலோ கஞ்சா மாயமான சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

புதிதாக பொறுப்பெடுத்த சான்றுப் பொருள் களஞ்சியத்தில் உடைக்கப்பட்டுள்ளமை தொடர்பில் ஊழியர்கள் பதிவாளருக்கு வழங்கிய தகவலிற்கு அமைவாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டது. இதன்போதே சான்றுப் பொருட்கள் மாயமான சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த சில மாதங்களிற்கு முன்னர் இவ்வாறு மாயமாகியுள்ளமை கண்டறியப்பட்டதையடுத்து, கொழும்பிலிருந்து வந்த விசேட குழு முன்னெடுத்த விசாரணைகளின் அடிப்படையில் ஊழியர்கள் மூவருக்கு வெளிநாட்டு பயணத் தடை விதிக்கப்பட்டுள்ளது. (நி-6-100)

# தேசிய சதுரங்க சுற்றுப்போட்டிக்கான வீரர்கள் தெரிவு மன்னாரில்



(மன்னார்)

தேசிய அளவில் இடம்பெறவுள்ள சதுரங்க சுற்றுப்போட்டிக்கான வீரர்கள் தெரிவு செய்யும் சுற்றுப்போட்டியானது யாழ். மாவட்ட சதுரங்க சம்மேளனத்தின் அனுசரணையில் மன்னார் மாவட்ட சதுரங்க சம்மேளனத்தின் ஒழுங்கமைப்பில் மன்/புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியில் நேற்று இடம்பெற்றது.

மன்னார் மாவட்டத்தை சேர்ந்த 80 இற்கு மேற்பட்ட போட்டியாளர்கள் குறித்த போட்டியில் கலந்து கொண்டார்கள். போட்டிகள் அனைத்தும் ஐந்து சுற்றுக்களாக இடம்பெற்ற நிலையில் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் மற்றும் சான்றிதழ்கள் மாவட்ட சதுரங்க சம்மேளத்தினால் வழங்கி வைக்கப்பட்டது.

மேலும் குறித்த போட்டியில் வெற்றி பெற்ற போட்டியாளர்கள் தேசிய ரீதியில் இடம்பெறவுள்ள 2023/2024 ஆண்டுக்கான சதுரங்க சுற்றுபோட்டியில் கலந்து கொள்வார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-6-285)

# வீதியில் பயணித்த பெண்ணின் கைப்பை பறிமுதல்

(யாழ்ப்பாணம்)

கிராம அலுவலரிடம் இருந்து பெருந்தொகைப் பணம் கொள்ளையிடப்பட்டுள்ள சம்பவம் ஒன்று உரும்பிராய் பகுதியில் நேற்றுமுன்தினம் காலை இடம்பெற்றுள்ளது.

உரும்பிராய் சந்தி நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த பெண் கிராம அலுவலர் அணிந்திருந்த கைப்பையை, மோட்டார் சைக்கிளில் வேகமாகப் பயணித்த இரண்டு இளைஞர்கள் அறுத்துக்கொண்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இது தொடர்பில் கிராம அலுவலரால் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது

கைப்பைக்குள் அலைபேசி மற்றும் ஒரு இலட்சத்து 75 ஆயிரம் ரூபா பணம் இருந்தது என்றும் அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து மேலதிக விசாரணைகளை கோப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி-6)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 180 | 250 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 400 | 450 | 500 |
| தக்காளி | 200 | 200 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 140 | 160 | 160 |
| கோவா | 150 | 150 | 200 |
| கரட் | 250 | 300 | 300 |
| பூசணி | 80 | 60 | 100 |
| புடோல் | 100 | 100 | 200 |
| வாழைக்காய் | 180 | 150 | 240 |
| சின்ன வெங்காயம் | 250 | 250 | 350 |
| பெரிய வெங்காயம் | 200 | 200 | 300 |
| பாகற்காய் | 450 | 500 | 1000 |
| வெண்டக்காய் | 140 | 100 | 250 |
| கருணைக் கிழங்கு | 100 | 150 | 200 |
| பயற்றங்காய் | 300 | 250 | 400 |
| லீக்ஸ் | 160 | 150 | 200 |
| பீற்றூட் | 120 | 150 | 200 |
| கறிமிளகாய் | 350 | 250 | 400 |
| முருங்கைக்காய் | 140 | 100 | 160 |
| போஞ்சி | 400 | 450 | 500 |
| கத்தரிதம்புள்ள | 140 | 120 | 200 |
| கீரை - 1 பிடி | 70 | 80 | 100 |
| தேசிக்காய் | 1200 | 1200 | 1800 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 60-90 |
| இராசவள்ளி | 450 | 450 | 550 |
| வெங்காயப்பூ | 300 | 400 | 450 |
| முள்ளங்கி | 100 | 140 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 60 |
| வல்லாரை | 30 | 40 | 60 |
| ஈரப்பலா | 100 | 120 | 150 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

# அதிகாலை நீர் பருகுதலின் மருத்துவ முக்கியத்துவம்



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

அதிகாலை எழுந்தவுடன் நீர் பருகுதல் பல நன்மைகளை உடலுக்கு ஏற்படுத்துவதாகச் சித்தர்கள் கூறுகின்றனர். இப்பழக்கத்தினால் பல நோய்கள் உடலைத் தாக்காதவாறு பாதுகாப்பதோடு சில நோய்களுக்கு மருந்தாகவும் அமைகின்றது. ஆற்றுநீர், ஊற்றுநீர், மழைநீர், பனிநீர் போன்ற பல வகையான நீர்களின் குணங்கள் தனித்தனியே சித்தர் நூல்களில் கொடுக்கப்பட்டுள்ளன.

இன்று ஓரளவு வழக்கத்தில் ஆற்றுநீர் மட்டுமே பயன்படுத்துகின்றோம். கனிநீரினை சிறிது முயற்சி செய்தால் சேகரித்து பயன்படுத்தலாம். மருத நிலத்தில் (வயல்கள், மரங்கள் நிறைந்த பகுதி) பாயும் ஆற்றுநீரினை பயன்படுத்துவதால் ஏற்படும் நன்மைகளை,

"ஆற்றுநீர் வாதம் அனலம் கபத்தோடு தோற்றுகின்ற தாகந் தொலைக்குமே ஊற்றமிகும் தேகத்தினோ யைமெலாஞ் சீறித் துரத்திவிடும் போகத்தில் தாதுவுமாம் போற்று."

அதிகாலையில் தூய்மையான ஆற்றுநீரினைப் பருகுவதால் உயிராற்றல் மேம்படும். வளி, அழல், ஐயம் என்கின்ற மூன்று உயிர் ஆற்றல்களின் மாறுபாடுகள் சீராகும். ஏழு உடற்கட்டுகளும் தூய்மையாகும். உடலில் அடிப்படைத் திசுக்களில் கலந்துள்ள நச்சுத்தன்மை நீக்கப்படும்.

பனிக்காலங்களில் மெல்லிய பருத்தித்துணியினை வாய் அகலமான பாத்திரத்தில் தளர்வாகக் கட்டிவிட்டால் துணியில் விழக்கூடிய பனிநீரானது கீழ் உள்ள பாத்திரத்தில் சேகரமாகும். பனிக்காலத்தில் மட்டும் குடிக்க வேண்டும். முதலில் 200 மில்லி குடிக்கத் தொடங்கிச் சிறிது சிறிதாக உயர்த்தி 1400 மில்லி வரை குடிக்கலாம். இதனை பனிபெய்யும் காலத்தில் மட்டுமே குடித்தாலே ஆண்டு முழுவதும் உடலை ஆரோக்கியமாக வாழ வைக்க முடியும். இதனால் சூரியன் உதிப்பதற்கு முன்பாக சிறுநீரும் மலமும் கழிப்பதற்கு முன்பாகப் பனிநீரினை அருந்துதல் வேண்டும். அப்படிச் செய்வதால் அது அமிர்தம்



போல உடலினை நோய்களிலிருந்து பாதுகாக்கும்.

உடலில் ஏற்பட்டுள்ள வயிற்றுப்புண், நீரிழிவு, சளியுடன் கூடிய இருமல், பேதி நோய், மூலநோய், அதி இரத்த அழுத்தம், பல வகையான காய்ச்சல், மலக்கட்டு. சிறுநீர் நோய்கள் போன்ற பலவகையான சிறுநீர் நோய்கள் போன்ற பல வகையான நோய்கள் விரைவில் உடலை விட்டு நீங்குவதற்கும் பனிநீர் அருந்தல் வழிவகுக்கும்.

பனிநீரினை சுரம், சளி போன்ற நிலைகளில் பயன்படுத்தும் போது காய்ச்சிப் பயன்படுத்த வேண்டும். பனிநீர் சிறப்பித்து கூறப்பட்டதற்கு காரணம் அதன் தூய்மையும் வான் வெளியிலுள்ள காந்த ஆற்றலும் அந்நீரில் கலந்து அதன் குணம் மேம்படுகிறது.

ஆனால் ஆற்றுநீரின் குணமானது இடத்திற்கு இடம் வேறுபடும்.

"தண்ணீர் நில நலத்தால்"

-மூதுரை.

"நீரின் குணம் வேறில்லை; பாரின் குணமே வேறு"

-தேரையர் தரு.

"தண்ணீர் குணமெல்லாந் தான் கேள் மடமயிலே மண்ணின் குணமல்லால் மற்றுண்டோ"

-பொருட்பண்பு நூல்

"நிலவிதியல்பால் நீர் திரிந்ததற்றாகும்"

-திருக்குறள்

தமிழ் இலக்கிய நூல்களில் இவ்வாறு கொல்லப்பட்டிருப்பதால் நீரின் தனிக்குணம்என்று தனியே கிடையாது. அது தங்குமிடத்தின் வேறுபாடுகளாலேயே அதன் குணம் வேறுபடுகிறது.

எந்த வகையான நீராக இருந்தாலும் பொதுவாக ஏற்படும் நன்மைகளை நோக்குவோமானால் தூங்கி எழுந்து வாய்த் தூய்மை செய்தபின்பு மலம், சிறுநீர் கழிப்பதற்கு முன்பாகவே தூய நீரினை அருந்துதல் வேண்டும்.

அருந்தும் அளவினைச் சிறிது சிறிதாக உயர்த்திக் கொள்ளலாம். வாந்தி வரும் உணர்ச்சி ஏற்பட்டால் நிறுத்திக் கொள்ளலாம். உடலின் உள்உறுப்புகள் தூய்மையாவதற்கு வழியாகும்.

அத்துடன் குடல் தூய்மையாவதால் சீரணம் சீராக நடைபெற்று உணவின் நுண் ஊட்டச்சத்துக்கள் முழுமையாக உட்கிரகிக்கும் ஆற்றல் குடலுக்கு கிடைக்கும். அத்துடன் இரத்த ஓட்டம் சீராகி இரத்தத்தில் உள்ள மலினங்கள் வேகமாக வெளியேறும். இதனால் முகப்பொலிவு, தோல் பளபளப்பு ஏற்படும்.

உடல் திசுக்களில் பெரும்பாலான பகுதி நீரினால் நிரப்பப்பட்டிருக்கும். குறிப்பாக மூளைத் திசுவில் 75 வீதம் நீர்தான் உள்ளது. அதிகாலை நீர் பருகுவதால் மூளையின் செயற்பாடு சீராகும்.

உடல் சோம்பல், மனம் தளர்ச்சி நீங்கும், மலச்சிக்கல் நீங்கும். உடலின் நிணநீர்ச் சுரப்பிகளின் ஆற்றல் மேம்படுவதால் எதிர்ப்பாற்றல் பெருகும். அத்துடன் தாகம் ஏற்படும் போது கட்டாயமாக நீர் அருந்த வேண்டும். நீரின்றி உடல்நலத்தினைக் காக்க இயலாது

அதிகமாக நீரும் அருந்தக்கூடாது. அதேபோல குறைந்தளவு நீரும் அருந்தக் கூடாது. சராசரியாக 2-2.5 லீற்றர் நீர் அருந்தலாம். அதிகமான உடற்பயிற்சிகளில் ஈடுபடுபவர்கள் 4 லீற்றர் நீர் வரை அருந்தலாம். அதேபோல ஒரு நாளைக்கு'1 லீற்றருக்கு குறைவாகவும் நீர் அருந்தக்கூடாது. எப்போதும் தாகம் எடுக்கும் போதே நீர் அருந்த வேண்டும்.

இரவு தூக்கத்தின் நடுவில் சிலர் தண்ணீர் குடிப்பார்கள். அது கூடாது என்பதை விட தேவையில்லை என்றே குறிப்பிடலாம். உதாரணமாக ஒருவர் இரவு 10.00 மணிக்கு தூங்கப் போறார் என்றால் இரண்டு மணி நேரம் முன்பாகவே அன்று தேவையான அளவு நீரை அருந்தி முடித்தல் சிறப்பாகும்.

இரவு இடையில் தண்ணீர் அருந்துவதால் தூக்கத்தில் தொந்தரவு ஏற்படும். சிறுநீர் தூக்கத்தில் எழுந்து அடிக்கடி கழிக்க வேண்டி ஏற்படும். அடுத்த நாளுக்குரிய புத்துணர்ச்சி ஏற்படாமல் போய்விடும். அத்துடன் பகற்பொழுது கூட ஒரேயடியாக நீர் எடுக்காமல் இடைவெளி விட்டு நீர் அருந்துதல் சிறந்ததாகும்.

காலையில் 700-900 மில்லிலீற்றர் கொதித்தாறிய நீர் அருந்தலாம். காலை உணவு அருந்தும் போது நீர் ஆகாரம் அருந்தாமல், 30 நிமிட நேரம் சென்றபின் போதிய நீர் அருந்தலாம். மதிய உணவிற்கு 30 நிமிட முன்னதாக 400 மில்லி அளவு நீர் அருந்த வேண்டும். இவ்வளவு மருத்துவப் பண்புகள் நிறைந்த நீர் எமக்கு கிடைக்க வேண்டுமானால் இயன்றளவுசூழலை மாசடையாமல் பாதுகாத்துக் கொள்வதும் எமது முக்கிய கடமையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர்

303



"ஆம் எங்கள் கடல் வர்த்தகம் மேலும் செழித்து ஓங்கும் என்றும் சொல்லியிருக்கிறான்."

"மிகவும் சந்தோஷம் ஸ்ரீரங்கநாதருடைய அருள் இருந்தால் அப்படியே நடக்கும். இலங்கையில் யுத்தம் நடக்கும் வரையில் மாதம் ஒரு தடவை நீங்கள் இப்படியே அரிசி முதலியவை அனுப்பி வரவேண்டும். போய் வாருங்கள்."

"அப்படியே செய்கிறோம், போய் வருகிறோம்."

ஐந்நூற்றுவர் சபையின் பிரதிநிதிகள் போன பிறகு ஒரு காவலன் வந்து, "தெரிஞ்சகைக்கோளப் படைச் சேனாதிபதிகள் காத்திருக்கிறார்கள், பார்க்க விரும்புகிறார்கள்" என்று சொன்னான்.

"வரச் சொல்லு!" என்றார் முதல் அமைச்சர் அநிருத்தர்.

மூன்று கம்பீர புருஷர்கள் பிரவேசித்தார்கள். அவர்களுடைய முகங்களிலும் தோற்றத்திலும் வீர லக்ஷ்மி வாசம் செய்தாள். அஞ்சா நெஞ்சம் படைத்த ஆண்மையாளர் என்று பார்த்தவுடனே தெரிந்தது.

இன்று தமிழ் நாட்டில் கைத்தறி நெசவுத் தொழிலில் ஈடுபட்டு நூலின்றித் திண்டாடும் கைக்கோள வகுப்பார் சோழப் பேரரசின் காலத்தில் புகழ்பெற்ற வீர வகுப்பாராயிருந்தனர். அவர்களில் பொறுக்கி எடுத்த வீரர்களைக் கொண்டு சோழ சக்கரவர்த்திகள் அகப் பரிவாரப் படையை அமைத்துக் கொள்வது வழக்கம். அப்படிப் பொறுக்கி எடுக்கப்பட்ட படைக்குத் 'தெரிஞ்ச கைக்கோளர் படை' என்ற பெயர் வழங்கியது. அந்தந்தச் சக்கரவர்த்தி அல்லது அரசரின் பெயரையும் படைப்பெயருக்கு முன்னால் சேர்த்துக் கொள்வதுண்டு.

சுந்தர சோழ தெரிஞ்ச கைக்கோளப் படையார் தானே? என்று அநிருத்தர் கேட்டார்.

ஆம், ஐயா! ஆனால் அப்படிச் சொல்லிக் கொள்ளவும் எங்களுக்கு வெட்கமாயிருக்கிறது."

"அது ஏன்?"

"சக்கரவர்த்தியின் சோற்றைத் தின்றுகொண்டு ஆறு மாத காலமாக இங்கே வீணில் காலங்கழித்துக் கொண்டிருக்கிறோம்."

"உங்கள் படையில் எத்தனை கை? எத்தனை வீரர்கள்?"

"எங்கள் சேனை மூன்று கைமா சேனை, இவர் இடங்கை சேனைத் தலைவர் இவர் வலங்கை சேனைத் தலைவர் நான் நடுவிற்கைப் படைத் தலைவன். ஒவ்வொரு கையிலும் இரண்டாயிரம் வீரர்கள். எல்லோரும் சாப்பிட்டுத் தூங்கி கொண்டிருக்கிறோம். போர்த் தொழிலே எங்களுக்கு மறந்து விடும் போலிருக்கிறது."

"உங்களுடைய கோரிக்கை என்ன?"

"எங்களை இலங்கைக்கு அனுப்பி வைக்கக் கோருகிறோம். இளவரசர் அருள்மொழிவர்மர் மாதண்ட நாயகராயிருக்கும் சைன்யத்திலே சேர்ந்து யுத்தம் செய்ய விரும்புகிறோம்!"

"ஆகட்டும் தஞ்சைக்குப் போனதும் சக்கரவர்த்தியின் சம்மதம் கேட்டுவிட்டு உங்களுக்கு அறிவிக்கிறேன்."

"பிரம்மராஜரே! அதற்குள்ளே இலங்கை யுத்தம் முடிந்து விட்டால்.?"

"அந்தப் பயம் உங்களுக்கு வேண்டாம், இலங்கையுத்தம் இப்போதைக்கு முடியும் என்பதாகத் தோன்றவில்லை."

"ஈழத்துச் சேனாவீரர்கள் அவ்வளவு பொல்லாதவர்களா? எங்களை அங்கே அனுப்பி வையுங்கள். ஒரு கை பார்க்கிறோம்!"

"ஒரு கை என்ன? நீங்கள் மூன்று கையும் பார்ப்பீர்கள், தெரிஞ்ச கைக்கோளரின் மூன்று கை மாசேனை யுத்தக்களத்தில் புகுந்துவிட்டால் பகைவர்களின் பாடு என்னவென்று சொல்ல வேண்டுமோ? நடுவிற்கை வீரர்கள் பகைவர் படையின் நடுவில் புகுந்து தாக்குவீர்கள். அதே சமயத்தில் இடங்கை வீரர்கள் இடப்புறத்திலும் வலங்கை வீரர்கள் வலப்புறத்திலும் சென்று இடி விழுவது போலப் பகைவர்கள் மீது விழுந்து தாக்குவீர்கள்."

"அப்படித் தாக்கித்தான் பாண்டிய சைன்யத்தை நிர்மூலம் செய்தோம் சேரர்களை முறியடித்தோம்."

"பாண்டியர்களும் சேரர்களும் போர்க்களத்தில் எதிர்த்து நின்றார்கள் அதனால் அவர்களைத் தாக்கி முறியடித்தீர்கள். பகை வீரர்களை முதலில் கண்ணால் பார்த்தால்தானே அவர்களை நீங்கள் ஒரு கையும் பார்க்கலாம் மூன்று கையும் பார்க்கலாம்?"

(தொடரும்...)

## தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு

## யாழ். பொதுநூலகம் வழங்கும் ஆக்கங்கள்

## உங்களுக்குத் தெரியுமா? எக்ஸ்றே பிறந்தது எப்படி?



எலும்பு முறிவு ஏற்பட்டால் டாக் டர் எக்ஸ்றே எடுக்கச் சொல்கிறார். எலும்பு முறிவு எங்கு, எந்தளவுக்கு உள ளது என்பதை எக்ஸ்றே படம் காட்டுகிறது.

எக்ஸ்றே எடுக்கும் கருவியில் இருந்து கண்ணுக்குத் தெரியாத ஒரு வகைக் கதிர்கள் வெளிப்படுகின்றன. இவை சதையை எளிதில் ஊடுருவுகின்றன.

எலும்பின் வழியே ஊடுருவு வதில்லை எனவே எலும்பின் 'நிழல்' 'எக்ஸ்றே' கருவியில் மறுபுறத்தில் உள்ள பிலிமில் விழுகிறது இதையே எக்ஸ்றே படம் என்கிறோம்

1896 ஆம் ஆண்டில் தற்செயலாக இக் கதிர்கள் கண்டுபிடிக்கப்பட்ட போது இவை பற்றி ஒரே மர்மமாக இருந்தது, மர்மமான இனம் தெரியாத ஒன்றுக்கு 'எக்ஸ்' என்று ஆங்கிலத்தில் குறிப்பிடுவது வழக்கம். ஆகவே இக்கதிர்களுக்கு எக்ஸ்-றே என்று பெயர் வைக்கப்பட்டு அது நிலைத்து விட்டது.

தொழிற்சாலைகளில் சிலகாரியங்களுக்கு எக்ஸ்றே கருவி பயன்படுத்தப்படுகிறது. விமான நிலையங்களில் கடத்தல் பொருள், வெடி குண்டு ஆகியவற்றைக் கண்டு பிடிக்க எக்ஸ்றே கருவிகள் பயன்படுகின்றன.

[illegible]
தரம் 5B.

## நாம் தெரிந்திருக்க வேண்டியவை

| | |
|---|---|
| மிக மிக நல்ல நாள் | இன்று |
| மிகப்பெரிய வெகுமதி | மன்னிப்பு |
| மிகவும் வேண்டாதது | வெறுப்பு |
| மிகப் பெரிய தேவை | சமயோசித புத்தி |
| மிகப் பெரிய கொடிய நோய் | பேராசை |
| மிகவும் சுலபமானது | குற்றம் காணல் |
| கீழ்த்தரமான விடயம் | பொறாமை |
| நம்பக் கூடாதது | வதந்தி |
| ஆபத்தை விளைவிப்பது | அதிக பேச்சு |
| செய்யக் கூடாதது | உபதேசம் |
| செய்ய வேண்டியது | உதவி |
| விலக்க வேண்டியது | விவாதம் |
| உயர்வுக்கு வழி | உழைப்பு |
| நழுவ விடக் கூடாதது | வாய்ப்பு |
| இளமையிற் தேவை | கல்வி |

கா.மிதுஷன்
தரம் 5B

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமக்கு எறும்புகளைப்போல் உபதேசிப்பவர் யாரு மில்லை. ஆனால் அந்த எறும்புகளோ பேசு வதில்லை ~ஃபிராங்க்லின்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## புலமைப் பரிசில் பரீட்சை நடைபெறும் காலத்தில் மாணவர்களிடையே பரவும் கண் நோய்

தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை எதிர் வரும் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடை பெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள் ளன.

எனினும் தற்போது வடபகுதியில் நிலவும் கடும் வெப்பம் காரணமாக மாணவர்களி டையே கண்நோய் கடுமையாகப் பரவி வரு கிறது.

கண்நோய்த் தாக்கம் சில நாட்கள் மட்டுமே நீடிக்குமாக இருந்தாலும் பரீட்சைக் காலத் தில் மாணவர்கள் கண்நோய்க்கு ஆளாகும் போது, அது நிச்சயம் அந்த மாணவர்களைப் பாதிக்கவே செய்யும்.

அதாவது கண் நோய்க்கு ஆளாகும் போது, அதனால் பரீட்சைக்குத் தயார்படுத்து வது பாதிக்கப்படும்.

அதேசமயம் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை நடைபெறுகின்ற நாளில் கண்நோயின் தாக் கம் இருக்குமாயின் பிரஸ்தாப மாணவர்கள் பரீட்சை எழுதுவதில் இடர்பாட்டை எதிர்கொள்ள வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமையும் ஏற் படும்.

அதேசமயம் வடபகுதியில் மாணவர்களி டையே பரவுகின்ற கண்நோய் பற்றிய தகவல் களை மத்திய அரசாங்கம் அறிந்து கொள் ளும் என்பது கேள்விக்குரியது.

அதாவது தென்பகுதியில் ஏற்படுகின்ற பாதிப்புக்களை மையப்படுத்தியதாகவே அர சாங்கத்தின் தீர்மானங்களும் நடவடிக்கை களும் அமைவது வழமை.

ஆகையால் வடபகுதியில் நிலவுகின்ற வறட்சி நிலை காரணமாக மாணவர்களி டையே பரவுகின்ற கண்நோய் பற்றிய அவ தானிப்புகள் அரசாங்கத்திடம் இருக்கப் போவதில்லை.

எனவே இதுபற்றிய தகவல்களை மத்திய அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டு வருவதுடன் மாணவர்களிடையே பரவும் கண்நோய்த் தொற்றை கனிசமான அளவு கட்டுப்படுத்துவதற்கான ஏற்பாடுகளை பாட சாலை நிர்வாகமும் அந்தந்த சுகாதார வைத் திய அதிகாரி பிரிவுகளும் இணைந்து மேற் கொள்ள வேண்டும்.

தவிர, கண்நோயின் தாக்கத்தைக் குறைப் பதற்கான ஆலோசனைகளைவடபகுதியிலுள்ள கண் வைத்திய நிபுணர்கள் வழங்குவதும் காலத்தின் தேவையாகும்.

என்ன செய்வது நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் மழை கொட்டித் தீர்க்கின்றபோது, எங்கள் வடபுலத்தில் கடும் வறட்சி நீடித்து நிற் கிறது.

போதாக்குறைக்கு கடும் காற்றும் வீசுவ தால், கண்நோய்த் தொற்று வேகமாகப் பரவக்கூடிய வாய்ப்புகள் உண்டு.

எதுவாயினும் மாணவர்களிடையே பரவும் கண்நோய்த் தொற்றுக்காரணமாக தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றுகின்ற மாணவர்களுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாத வாறு பார்த்துக் கொள்வது நம் அனைவர தும் தலையாய கடமையாகும்.

# இந்திய மீனவர்களை இலங்கை கடற்பரப்பில் மீன்பிடிக்க அனுமதிப்பது தொடர்பில் பரிசீலனை

## பிரதமர் தினேஸ் குணவர்த்தன தெரிவிப்பு

இந்திய மீனவர்களு க்கு இலங்கை கடற்பரப் பிற்குள் மீன் பிடிப்பதற்கு அனுமதிப்பத்திரம் வழங் குவது தொடர்பில் பரி சீலனை செய்யப்பட்டு வரு வதாகவும் இந்த விடயம் தொடர்பில் இருதரப்பு மீன வர்களும் புரிந்துணர் வுடன் செயற்பட வேண் டும் எனவும் பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

இந்திய ஊடகமொன் றுக்கு நேற்று முன்தினம் வழங்கிய பிரத்தியேக செவ்வி ஒன்றிலேயே இந்த விடயம் தொடர்பில் அவர் தெரிவித்துள்ளார்.

எமது இரு நாட்டு கடற் பரப்பிலும் வாழக்கூடிய தமிழ் பேசும் மீனவர்கள் பெரிதும் பாதிப்புக்குள்ளா கும் மீனவ பிரச்சினை களுக்கு தீர்வு கிடையாதா இதற்கு நிரந்தர தீர்வு என்ன என வினவப்பட்ட கேள்விக்கு பதிலளித்த அவர்,

நீங்கள் கூறியது போன்று இருதரப்பிலும் தமிழ் பேசும் மீனவர்களே உள்ளனர்.

பிரச்சினை என்னவெ ன்றால் மீன்களுக்கு எல் லையொன்று இல்லை. மீன்கள் எல்லாப் பக்கங் களும் செல்லக்கூடியன. மீனவர்கள் மீன்களை பின்தொடர்ந்து சென்று பிடிக்கிறார்கள். பாக்கு நீரிணை ஒரு சிறிய பகுதி யாகும். இதுபற்றி விரிந்த பேச்சுவார்த்தைகள் நடத்துகின்றோம். தற் போது உடன்பாடுகளும்எட் டப்பட்டுள்ளன. கைதான இந்திய மீனவர்கள் சிலர் நல்லெண்ண அடிப்படை யில் விடுதலை செய்யப்பட் டுள்ளனர். இதேவேளை பிடிக்கப்படும் படகுகளும் விடுவிக்கப்படுகின்றன. வட பகுதி சிறந்த மீன் பிடி வளம் உள்ள பகுதியா கும்.

இந்திய மீனவர்க ளுக்கு அனுமதிப் பத்திரம் வழங்கி மீன் பிடிக்கக் கூடிய இந்தியாவின் முன்மொழிவுகள் பரிசீலி க்க தயாராகவே இருக் கிறோம். இருப்பினும் இந்த இரண்டு தரப்பு மீனவர் களின் ஒத்துழைப்புகளும் அவசியமாக உள்ளது. ஏனென்றால் இது அரசு தரப்பு சார்ந்த விடயம் மட்டுமல்ல. பிரதானமாக மீனவர்கள் சம்பந்தப்பட் டது. இந்த விவகாரத்தில் இருதரப்பு புரிந்துணர்வு கட்டாயம் இருக்க வேண் டும். ஜனாதிபதியின் டெல்லி வருகையின் போதும் தொடர்பாக தெளிவாக கலந்துரையாடப்பட்டது என்றார். (7)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் பொறியியல் சிறப்பு விஞ்ஞானமாணி (Bechelor of Science Honours in Engineering) கற்கைநெறிக்கான விண் ணப்பங்கள் கோரப்பட்டு ள்ளன.

இக்கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க விரும்பு வோர் 18 வயதிற்கு மேற் பட்டவராக இருப்பதுடன் க.பொ.த (உ/த) பரீட்சை யில் பௌதிக விஞ்ஞானப் பிரிவில் ஒரே அமர்வில் மூன்று பாடங்களில் சித் தியடைந்திருந்தல் வேண்டும்.

அல்லது இலங்கை திற ந்த பல்கலைக்கழகத்தி னால் நடத்தப்படுகின்ற கணித விஞ்ஞான அடிப்ப டைச் சான்றிதழ் கற்கை நெறியினைப் பூர்த்தி செய் திருத்தல்அல்லதுCambridge அல்லது Edexcel இன் உயர்தரப்பரீட்சையில் சித்தி யடைந்திருத்தல் (C Pass) அல்லது இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் மூதவையினால் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஏதாவது தகைமையைப் பெற்றி ருத்தல் வேண்டும்.

விண்ணப்பப்படிவங் களை www.ou.ac.lk எனும் இணையத்தள முகவரியில் பிரவேசித்து 01.11.2023 வரை விண் ணப்பிக்க முடியும்.

மேலதிக விபரங்களி ற்கு யாழ்ப்பாணம் பிராந் திய நிலையம் பிறவுண் வீதி கொக்குவில் எனும் முகவரியூடாகவும் மற்றும் 0212223374 தொலை பேசியூடாகவும் தொடர்பு கொண்டு விண்ணப்பிக்க முடியும் என யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் அறிவித்துள் ளார். (7)

## தடை செய்யப்பட்ட மோ.சைக்கிள்களுடன் எண்மர் பொலிஸாரால் கைது

(திருகோணமலை)

திருகோணமலை நிலாவெளி பொலிஸ் பிரி வுக்குட்பட்ட சாம்பல் தீவு பகுதியில் வீதியில் அனு மதிக்க முடியாத தடை செய்யப்பட்ட எட்டு மோட் டார் சைக்கிளுடன் எட்டு இளைஞர்கள் கைது செய் யப்பட்டுள்ளதாக நிலா வெளி பொலிஸார் தெரி வித்தனர்.

குறித்த சம்பவம் நேற்று இடம்பெற்றது. இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவ தாவது, குறித்த மோட்டார் சைக்கிளைப் போட்டிக்காக கொண்டு வந்ததாகவும் இதில் ஆறு மோட்டார் சைக்கிளுக்கு அனுமதிப் பத்திரம் இல்லை என பதும் அவை தடை செய் யப்பட்ட மோட்டார் சைக் கிள் எனவும் தெரியவரு கிறது.

கைது செய்யப்பட்ட இளைஞர்கள் சுமார் 20 தொடக்கம் 25 வயது டைய மீகமுவ மற்றும் அதனை அண்டிய பகுதி யைச் சேர்ந்தவர்கள் என வும் பொலிஸார் தெரிவித்த னர்.

கைது செய்யப்பட்ட குறித்த இளைஞர்களை உரிய மோட்டார் சைக் கிளுடன் திருகோண மலை நீதிமன்ற நீதவான் முன்னிலையில் ஆஜர் படுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக வும் பொலிஸார் தெரிவித்த னர். (7.104)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை **யாழ். பிரதேசத்தில்** அளவெட்டி, பன்னாலை, பொன் மலர்கடை, சீனோர் படகு துறை - காரைநகர், கடற்படை தளம் - காரைநகர், காரைநகர் கடற்படை முகாம், இ.போ.ச டிப்போ - காரைநகர், களபூமி, பாலகாடு அம்மன் கோவிலடி - காரைநகர், தோப்புக்காடு - காரைநகர், ஊரி - காரைநகர் ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## மின்னல் தாக்கியதில் ஒருவர் பலி; மூவர் காயம்

அம்பாறை - ஒலுவில் வெளிச்ச வீட்டிற்கு அரு கில் மின்னல் தாக்கி ஒரு வர் உயிரிழந்துள்ளது டன், மூவர் காயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

வெளிச்ச வீட்டிற்கு அரு கில் மீன் பிடித்துக் கொண்டிருந்த நால்வரே இந்த அனர்த்தத்தை எதிர் கொண்டுள்ளனர்.

மின்னல் தாக்கியதில், ஒலுவில் இரண்டாம் பிரி வைச் சேர்ந்த 34 வய தான ஒருவரே உயிரிழந் தவராவார்.

இந்த சம்பவம் தொடர் பில் அக்கரைப்பற்று பொலி ஸார் மேலதிக விசார ணைகளை ஆரம்பித் துள்ளனர். (7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்
## பொலநறுவை யுகத்திற்குப்பின் கண்டி இராச்சியத்தின் வீழ்ச்சி வரை - பகுதி ||

06



கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

### கோட்டை இராச்சியத்தின் பிளவு

அதன் பின்னர் கோட்டை இராச்சியம் றைகம, சீதாவாக்கை, கோட்டை என மூன்றாகப் பிளவு பட்டது. கோட்டை புவனேகபாகுவிற்கும், சீதாவாக்கை மாயாதுன்னைக்கும், றைகம மத்தும பண்டாரவிற்கும்(மத்தும பண்டார பின்னர் றைகம் பண்டார எனப் பட்டான்) உரியதாயின.

### ஏழாம் புவனேகபாகு (கி.பி 1521-1551)

கோட்டை மன்னன் மாயதுன்னை மீது சந்தேகத்துடனேயே இருந்தான். சீதாவாக்கை இராச்சியத்துடன் மாயதுன்னை திருப்தியடைய மாட்டான்எனப் புவனேகபாகு அறிந்திருந்தான். தன் சகோதரன் சிறந்த வீரன் என்பதை அறிந்திருந்த புவனேகபாகு, போர்த்துக் கேயரின் உதவியை நாடி நின்றான். கோட்டை இராச்சியம் பிளவுபட்டமை அதன பலவீனத்திற்கு வழிவகுத்தது. இது கோட்டை அரசில் போர்த்துக்கேயர் தலையிடுவதற்கும், இறுதியாகப் போர்த்துக்கேயர் வசம் கோட்டை இராசதானி வருவதற்கும்காரணமாக அமைந்தது. 1537இல் மாயாதுன்னை கோட்டை இராச்சியத்தைக் கைப்பற்ற போர்த்துக்கேயருடன் போரிட்டு தோல்வி அடைந்தான்.

கோட்டை அரசனான ஏழாம் புவனேகபாகுவுக்குப் புத்திரர்கள் இருக்கவில்லை. அதனால் தனக்குப் பின்னர் தன் மகள் சமுத்திராதேவியினதும் விதிய பண்டாராவினதும் மகனான தர்மபாலனை அரசனாக்க முடிவு செய்தான். அதனால் தர்மபாலனின் உருவச்சிலை ஒன்றினைப் பொன்னால் செய்து போர்த்துக்கல்லிற்கு 1543 இல் அனுப்பி வைத்தான். தனக்குப் பிறகு இலங்கை அரசின் உரிமையாளராக தர்மபால இளவரசனை ஏற்றுக் கொள்ளுமாறும் அரச உரிமையைப் பெற்றுக்கொள்வதில் அவனுக்கு உதவியாக இருக்குமாறும் கேட்டுக் கொண்டான். போர்த்துக்கல் மன்னன் அச்சிலைக்கு முடி சூட்டி இலங்கைக்கு அனுப்பி வைத்தான்.

மேலும் போர்த்துக்கல் மன்னனை மகிழ்விப்பதற்காக இலங்கையில் கிறிஸ்தவ சமயத்தைப் போதிப்பதற்காக மிஷனரிமார் சிலரை அனுப்பிவைக்குமாறும் வேண்டி நின்றான். புவனேகபாகு மன்னனின் வேண்டு கோளின் பேரில் 1543 ஆம் ஆண்டு பிரான்சிஸ்கன் மிஷனரிமார் நான்கு பேர் இலங்கை வந்தனர். அரச அனுசரணையுடன் கத்தோலிக்க சமயத்தைப் பரப்புவது அவர்களுக்கு இலகுவாக இருந்தது. நீர்கொழும்பு, முகத்துவாரம், மொரட்டுவ, பாணந்துறை, மக்கொன, பேருவல முதலிய பிரதேசங்களில் அதிகமாக மக்கள் கத்தோலிக்க சமயத்தைத் தழுவினர். புவனேகபாகு கத்தோலிக்க சமயத்தைத் தழுவாததாலும் மாயாதுன்னையைக் காட்டிக் கொடுக்காததினாலும் போர்த்துக் கேயர் அவனுடன் மனத்தாங்கலுற்றனர். 1551இல் புவனேகபாகு தற்செயலாக நடந்த துப்பாக்கிச் சூட்டினால் மரணமடையநேர்ந்தது.

### தொன்யுவான் தர்மபாலன் (கி.பி 1551-1597)

கி.பி 1551 ஆம் ஆண்டு புவனேகபாகு மன்னன் இறக்கும் போது அரச வாரிசான தர்மபால இளவரசன் சிறுவனாக இருந்த காரணத்தால் அவனது தந்தை விதிய பண்டார அரச கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டான். மாயாதுன்னையுடனும் போர்த்துக் கேயருடனும் முரண்பட்ட வீதியபண்டார பின்னர் யாழ்ப்பாணம் சென்று தலைமறைவானான். பிற் காலத்தில் ஏற்பட்ட கைகலப்பொன்றில்அவன் மரணமானான். வீதிய பண்டார இறந்தயைடுத்து தர்மபால இளவரசன் மன்னனானான்.

தொன்யுவான் தர்மபாலனின் ஆட்சிக் காலம் கி.பி 1551-1597 ஆகும். தர்மபாலன் அதன் பின்னர் 1557 இல் தொன் யுவான் தர்மபாலன் என்ற பெயரில் கிறிஸ்தவ மதத்தைத் தழுவிக் கொண்டு, ஆட்சியை ஏற்றுக் கொண்டான். கிறிஸ்தவ மதத்தைத் தழுவிய முதல் இலங்கை மன்னன் தர்மபாலனே.

தர்மபாலன் கத்தோலிக்க சமயத்தைத் தழுவிக் கொண்டதும் கோட்டையிலிருந்த பிக்குகளினதும் பிரதானிகளினதும் ஆதரவு மாயாதுன்னைக்குக் கிடைத்தது. அவர்கள் மாதுன்னையுடன் அணிசேர்ந்தனர். தியவதன நிலாமையாக இருந்த ஷரிப்பிட்டி நிலமே, கோட்டையிலிருந்த புனிததந்த தாதுவை எடுத்துச் சென்று மாயாதுன்னையிடம் ஒப்படைத்தான். தெல்கமுவ விகாரையில் அப்புனித தந்த தாது வைக்கப்பட்டது. கோட்டை இராசதானியிலிருந்த பிக்குகளும் சிங்களப் பிரதானிகளும் படிப்படியாகச் சென்று சீதாவாக்கைக்குச் சென்று குடியேறினார்கள். பௌத்தத்தின் பாதுகாவலானாக மாயாதுன்னையைக் கருதி புனித தந்ததாதுவையும் அவனிடம் ஒப்படைத்தனர்.

தர்மபால மன்னன் 1565 இல் கோட்டேயைக் கைவிட்டு போர்த்துக் கேயரின் கட்டுப்பாட்டில் தலைநகரத்தைக் கொழும்புக்கு மாற்றினான்.

கி.பி 1580 ஒகஸ்ட் 12 இல் தர்மபால மன்னன் போர்த்துக் கேயரின் நிர்ப்பந்தத்தால் கோட்டை இராச்சியத்தை அவர்களுக்குப் பரிசாக அளிப்பதாக உயில் (மரண சாசனம்) எழுதி வழங்கினான்.

தர்மபாலனுக்குக் குழந்தைகள் இல்லாத பட்சத்தில் இராச்சியம் போர்த்துக் கேயருக்கு உரியதாகும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. தர்மபாலனுக்கு வாரிசு இன்மையாலும் கி.பி 1597 மே29 ஆம் திகதியில் தர்மபால மன்னன் காலமானதாலும் கோட்டை இராச்சியம் போர்த்துக் கேயருக்கு உரிமையானது.

### ஸ்ரீசங்கபோதிவம்சம் சீதாவாக்கை இராச்சியம் (கி.பி 1521-1593)

கி.பி.1521 இல் நிகழ்ந்த நிகழ்ச்சியால் சீதாவாக்கை என்றொரு அரசு உருவானது. இதன் முதலாவது மன்னன் வீரம்மிக்க மாயாதுன்னை ஆவான். கி.பி 1538 இல் நிகழ்ந்த றைகமபண்டாரனின் மரணத்தின் பின் றைகம இராச்சியத்தை தன தாக்கிக் கொண்டதன் மூலம் சீதாவாக்கை இராச்சியத்தை விஸ்தரித்துக் கொள்ள மாயாதுன்னையால் முடியுமாயிருந்தது.கி.பி 1527 இலிருந்து 1537 வரை கோட்டை இராச்சியத்தை கைப்பற்ற எடுத்த எத்தனங்கள் தோல்வியில் முடியவே, தனது கொள்கையை மாற்றிக் கொண்டு, புவனேகபாகுவுடன் சமாதானப்பட்டு, கூட்டொன்றை ஏற்படுத்திக் கொண்டான். அரசின் உரிமைச் சின்னமான புனித தந்ததாது கிடைக்கப் பெற்றமையினால் தலைமைத்துவ மன்னனாக மாயாதுன்னை மதிக்கப்பட்டான்.

மாயா துன்னையும், அவன் மகன் டிகிரிபண்டாரகுமாரனும் 1564 இல் கொழும்புக் கோட்டையையும், கோட்டையையும் ஒரே முறையில் தாக்கினர். இரு இடங்களையும் ஏக காலத்தில் காப்பாற்ற முடியாது என்றுணர்ந்த போர்த்துக் கேயர், கோட்டையைக் கைவிட்டு தர்மபாலனைக் கூட்டிக் கொண்டு கொழும்புக் கோட்டைக்கு வந்து விட்டனர். 1565 இல் கோட்டை கைவிடப்பட்டபோது 150 ஆண்டுகளாகத் தலைநகராக விளங்கிய அவ்விடம் விரைவில் அழிவுறத் தொடங்கியது.

மாயாதுன்னை கொழும்பு தவிர்ந்த கோட்டை இராச்சியத்தின் ஏனைய பகுதிகள் முழுவதினதும் அதிபதியானான். அதன் படி கோட்டை, சீதாவாக்கை,றைகம, தெனவக்க, ஏழுகோறளை என்பன அவனது ஆட்சிக்கு உட்பட்டன. கி.பி 1521 ஆம் ஆண்டு சிறிய பிரதேசமொன்றில் ஆரம்பமான சீதாவாக்கை கி.பி 1579 ஆம் ஆண்டளவில் நாட்டின் முக்கிய இராச்சியமாக விளங்கியது.

### முதலாம் ராஜசிங்கன் (கி.பி1581 - 1593)

முதலாம் ராஜசிங்கன் (கி.பி1581 - 1593) வரை சீதாவக்கையை ஆண்ட அரசன் ஆவான். மாயாதுன்னையின் மகனான இவனின் இயற்பெயர் டிகிரிபண்டாரகுமாரன் ஆகும். மாயாதுன்னை போர்த்துக் கேயர் மீது படையெடுக்க இவன் உதவினான். தந்தை இறப்பிற்குப் பின்னர் முதலாம் ராஜசிங்கன் எனும் பெயரில் அரசனானான். ராஜசிங்கன் என்பதன் பொருள் சிங்கங்களின் ராஜா அல்லது அரச சிங்கம் ஆகும். இவரது அளப்பரிய தைரியத்தையும் தேசப்பற்றையும் வரலாறு குறிப்பிடுகிறது.

அவர் 1433 முதல் 1544 வரை ஆட்சி செய்ததாக பொதுவாகக் கூறப்படுகிறது. ஆனால் டிகுரோஸின் கூற்றுப்படி, மாயா துன்னை மன்னர் தனது அரசை 1578 இல் ராஜசிங்க மன்னருக்கு மாற்றினார் என்றும் 1581 இல், மாயாதுன்னை மன்னர் இறந்தார் என்றும் கூறப்படுகிறது. மன்னன் மாயாதுன்னையின் மரணத்திற்கும், ராஜசிங்க அரசனுக்கும் தொடர்பு இருப்பதாக பல்வேறு ஆதாரங்களில் முரண்பட்ட தகவல்கள் உள்ளன.

கீர்த்தி ஸ்ரீஇராஜசிங்கன் ஆட்சிக் காலத்தில் திப்போடுவ புத்தரக் கிதஸ்தா வீர எழுதிய மகாவம்சத்தின் 4 ஆவது அத்தியாயத்தில் அரசன் மாயாதுன்னையை மன்னன் ராஜசிங்க கொன்றதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மன்னனின் தந்தையைக் கொன்றதை பௌத்த பிக்குகள் பெரும்பாவமாகக் கருதியதால், அரசனுக்கும் துறவிகளுக்கும் இடையே மோதல்கள் ஏற்பட்டதாகவும், அதன் விளைவாக, அரசர் பௌத்த விரோதப் போக்கைக் கடைப்பிடித்ததாகவும் நூல்களில் குறிப்பிடுகிறது. இவற்றுக்கெல்லாம் போதிய ஆதாரம் இல்லையென வரலாற்று ஆசிரியர்கள் வாதாடுகின்றனர்.

சூளவம்சத்தில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கையை ஆண்ட மன்னர்களில் பெரும்பாலோர் பௌத்த மதத்தை சார்ந்தவர்களே. ஒரு சில சிங்கள மன்னர்கள் மட்டுமே சைவ நெறியையும் ஆதரித்திருக்கின்றார்கள். அதற்கு உதாரணமாக ராஜசிங்கன் என்பவனைப் பற்றி குறிப்பிடலாம். இவன் மாயாதுன்னை என்பவனின் மகன். ஆட்சியை கைப்பற்ற வேண்டும் என்ற எண்ணத்துடன் தனது தந்தையைக் கொன்று ராஜ்யத்தைக் கைப்பற்றிக் கொண்டான்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சேவைக்காலம்...

அவரது பணிக்காலத்தை இரண்டு முறை நீடித்தது.

இரண்டாவது முறை வழங்கப்பட்ட பணி நீடிப்பு காலம் இன்றுடன் முடிவடைய உள்ள நிலையில், அவருக்கு மீண்டும் பணி நீடிப்பு வழங்கப்படுமா? அல்லது புதிய பொலிஸ் மா அதிபர் நியமிக்கப்படுவாரா? என்பது இதுவரை தெரியவரவில்லை.

அத்துடன் புதிய பொலிஸ் மா அதிபரை நியமிப்பது சம்பந்தமான பரிந்துரைகள் இதுவரை அரசியலமைப்பு பேரவைக்கு கிடைக்கப் பெறாத நிலையில், விக்ரமரத்னவுக்கு மீண்டும் பணி நீடிப்பு வழங்கப்படலாம் என நம்பப்படுகின்றது.

எவ்வாறாயினும் பொலிஸ் மா அதிபர் பதவியை பெற பல சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் முயற்சி செய்து வருவதாகவும் கூறப்படுகிறது. (7)

## உயர் நீதிமன்று...

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி சரவணராஜா உயிரச்சுறுத்தல் மற்றும் பல்வேறு அழுத்தங்கள் காரணமாகப் பதவி விலகுவதாகக் குறிப்பிட்டு கடந்த மாத இறுதியில் நீதிச்சேவைகள் ஆணைக்குழுவுக்கு அவரது இராஜினாமாக் கடிதத்தை அனுப்பி வைத்திருந்ததுடன், நாட்டிலிருந்தும் வெளியேறியமை பல்வேறு சர்ச்சைகளையும் நீதித்துறை சுதந்திரம் தொடர்பில் கேள்விகளையும் தோற்றுவித்திருந்தது.

இவ்வாறானதொரு பின்னணியிலேயே நாட்டின் பல்வேறு பாகங்களிலும் உள்ள சட்டத்தரணிகள் ஒன்றிணைந்து இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு கொழும்பு, ஹல்ஃப்ஸ்டொப்பில் அமைந்துள்ள உயர்நீதிமன்றத்துக்கு முன்பாக கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர். (7)

## கப்பல் பரீட்...

நிலையில் நேற்றைய தினம் பரீட்சார்த்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

அதன் பிரகாரம் நேற்றுக் காலை இந்தியாவின் நாகபட்டினத்தில் இருந்து புறப்பட்ட செரியாபாணி எனும் குளிரூட்டப்பட்ட கப்பல் மதியம் 1.15 மணியளவில் காங்கேசன்துறை துறைமுகத்தை வந்தடைந்திருந்தது

இந்தக் கப்பலில் பணியாற்றும் 14 பணியாளர்கள் மட்டுமே இந்தப் பரீட்சார்த்த நடவடிக்கைகளின் போது வருகை தந்திருந்தனர்.

இப்பரீட்சார்த்த நடவடிக்கை களின் போது கப்பல் சேவைக்கு பயன் படுத்தப்படும் கடல் பாதை, கடல் மற்றும் காலநிலை நிலைவரம் சகல விடயங்களும் கணக்கெடுக்கப்பட்டது.

பரீட்சார்த்த நடவடிக்கை வெற்றிகரமாக மேற்கொண்டமையை முன்னிட்டு கேக் வெட்டி கொண்டாடப்பட்டது. சுமார் அரை மணி நேரம் தரித்து நின்ற பின்னர் மதியம் 1.45 மணியளவில் மீண்டும் இக்கப்பல் நாகபட்டினம் நோக்கி புறப்பட்டது.

இந்த கப்பல் சேவையின் மூலம் நாகபட்டினத்தில் இருந்து 3 மணி நேரத்தில் இலங்கை வரமுடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (7)

## தாயகத்தில்...

கையளிக்கவுள்ள மகஜரில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள் குறித்த முக்கிய கலந்துரையாடல் இன்று இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணம் தந்தை செல்வா அரங்கில் இன்று திங்கட்கிழமை மாலை 3 மணிக்கு தமிழ் கட்சிகள் மற்றும் பொது அமைப்புக்களின் பங்குபற்றலுடன் நடைபெறவுள்ள இக் கலந்துரையாடலில் சமூக ஆர்வலர்கள், தமிழ் உணர்வார்கள், பொது அமைப்புகள் கலந்து கொண்டு ஹர்த் தால் திகதி தொடர்பில் கருத்துக்களை முன்வைக்கமுடியும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் அறிவித்துள்ளார். (7-33)

## ரணிலின்...

மட்டக்களப்பு மயிலத்தமடு மாதவனைப் பிரதேசத்தில் உள்ள மேய்ச்சல் நிலங்களை சிங்கள மக்கள் ஆக்கிரமித்து வருவதற்கு அப்பகுதியைச் சேர்ந்த தமிழ்ப் பண்ணையாளர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்து கடந்த 23 நாட்களாகப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்துக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்றைய தினம் விஜயம் செய்த போது, அவரின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் மேய்ச்சல் நில ஆக்கிரமிப்பைத் தடை செய்யுமாறு வலியுறுத்தியும் மட்டக்களப்பு பண்ணையாளர்களும் பொதுமக்களும் இணைந்து பெரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது பொலிஸாருக்கும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு மிடையே முறுகல் நிலை ஏற்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களைத் தடுத்து நிறுத்துவதில் பொலிஸார் ஈடுபட்டபோது, அங்கு பொலிஸாருக்கும் பண்ணையாளர்களுக்கு மிடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டதால், அப்பகுதியில் பெரும் பதற்றம் உருவாகியது. (7)

## காரைநகரில்...

இளைஞனை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட இளைஞனை பொலிஸார் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (7)

## எந்தத் தடை...

யாளர்களுடன் போராட்டக்களத்தில் தமிழரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனும் கலந்து கொண்டிருந்தார்.

இதன்போது கருத்துத் தெரவித்த அவர்,

உரிமை இழந்தோம் காணிகளையும் இழந்தோம் உணர்வை இழக்கலாமா. தோல்வி நிலையென நினைத்தால் தன்மான தமிழன் வாழ்வை நினைக்கலாமா. எமது அறவழி போராட்டம் எமது மக்களுக்காக எந்த தடை வந்தாலும் உரிமை கிடைக்கும் வரை என்றும் தொடரும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (7)

## முறு...

உடனடியாக நிறுத்துமாறும், மேலும் பொதுமக்கள் உயிரிழப்பைத் தடுக்க அனைத்து தரப்பினரும் அதிக பட்சகட்டுப்பாட்டை கடைப்பிடிக்குமாறும் இலங்கை அழைப்பு விடுத்துள்ளது.

"1967 எல்லைகளின் அடிப்படையில் அருகருகே வாழும் இரு நாடுகளின் சர்வதேச ரீதியில் ஒப்புக் கொள்ளப்பட்ட அளவுருக்களுக்கு இணங்க, பேச்சு வார்த்தை மூலம் தீர்வு காண்பதற்கு ஆதரவளிக்க இலங்கை உறுதியாக உள்ளது" என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளதாவது,

"அன்புக்குரியவர்களை இழந்த அனைவருக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம் மற்றும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு எங்கள் அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்".

டெல் அவிவ் மற்றும் ரமல்லாவில் உள்ள இலங்கை தூதரகங்கள் நிலைமையை உன்னிப்பாகக் கண்காணித்து வருவதாகவும், பாதிக்கப்பட்ட பகுதிகளில் வசிக்கும் இலங்கையர் களுடன் தொடர்பில் இருப்பதாகவும், வன்முறையின் போது இதுவரை ஒரு இலங்கையர் சிறு காயங்களுக்கு உள்ளாகியுள்ள தாகவும் அது கூறியுள்ளது. (7)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2023/10/08
சீட்டிழுப்பு இலக்கம் 5261
B 5 9 2 0 1 9

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3503
சீட்டிழுப்பு திகதி 08.10.2023
O 04 21 32 58
O 59986

Lucky 7
திகதி 08.10.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0087
L7 இலக்கம் 2 5
வெற்றி இலக்கினம் மிதுனம்
வெற்றி இலக்கங்கள் 8 5 7 3 2 6

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.10.08
சீட்டிழுப்பு இலக்கம் 570
கடகம் 09 27 48 60 கடகம்

தன நிதானய
திகதி - 2023.10.08
சீட்டிழுப்பு இலக்கம் - 1291
G 23 27 57 75 G
Double Chance 23426

மெகா பவர்
திகதி 08/10/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1609
G 11 27 38 60 77
69488

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2235
வர்ணம் செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2023.10.08
தினம் ஞாயிற்றுக்கிழமை
06 14 36 61 A
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 71,143,892.40

சனிதா
திகதி 2023.10.08 வெற்றி வாரம் 4396
44 45 59 64 Y
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.59,947,936.00
செவன்ஸ் சான்ஸ் 6 3 4 6 3

சசிரி
வெற்றி வாரம் 386
சீட்டிழுப்பு திகதி 2023.10.08
வெற்றி இலக்கங்கள் 26 46 48
கபிலம்
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,632,040/-

ராசி
சீட்டிழுப்பு வாரம் 3947
வர்ணம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2023.10.08
தினம் ஞாயிற்றுக்கிழமை
28 40 46 58 கன்னி
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 6,144,524/-
476336 196 சிம்மம்

திகதி 08.10.2023 வெற்றி வாரம் 1411 வர்ணம் மஞ்சள்
H 11 09 20 27 63
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 449,417,394.20
145915 711
DLB தொலை பேசி : 011-2 333 546-47 Web : www.dlb.lk

அட கோடிபதி ADA KOTIPATHI
ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம் : 2081
சீட்டிழுப்பு திகதி : 2023.10.08
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.60,144,720/-
28 30 45 52 M
373229


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்க லொத்தர் விசா
2025 ஆம் ஆண்டுக்கான அமெரிக்க லொத்தர் விசா விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.
★5000 இற்கு மேற்பட்டோர் தெரிவு செய்யப்படுவர்.
★அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்
திருமுருகன் கொம் நெற்
321, K.K.S Road, Jaffna.
077 755 4528 (17390)

வெளிநாடுகளுக்கான DHL பொதிகள் சேவை
மிகக் குறைந்த கட்டணத்தில்
UK - 400/=, Canada - 1000/=
மற்றைய நாடுகளுக்கும் விசேட சலுகைகள்
திருமுருகன் கொம்நெற்
T.P: 0777 55 45 28
321, K.K.S. Road, Jaffna. (17390)

A/L -2023 DAY CLASS
(2ஆம் தடவை தோற்றுவோருக்கானது)
புவியியல் - N.BABU
DMI — ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (ஆரியகுளம்) (Sat,Sun -11Am)
C.C.A — சுன்னாகம் (Thu,Fri - 2 pm)
மொடேண் - சண்டிலிப்பாய் (Thu,Fri - 5Pm)
077 936 5087 (C-7400)

VILLAGE HOTEL JAFFNA EXPRESS
பஸ் சேவை
AIRPORT PICK UP DROP SERVICE
யாழ் - கொழும்பு 2,900/=
வடமராட்சி - கொழும்பு 2,700/=

T.P:077 544 8503 (17019)

பணியாளர் தேவை
உடுவில் பிரதேச சபை எல்லைக்குள் தங்கி நின்று வீடு பராமரிக்க பணியாளர் தேவை.
★நற்பழக்கம் மற்றும் தேக ஆரோக்கியம் உள்ளவராக இருத்தல் வேண்டும்.
★சம்பளம் திறமைக்கு ஏற்ப நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். (17388)
075 409 6948

காணி விற்பனைக்கு
கோண்டாவில் ராஜா பிளாசாவிற்கு அருகாமையில் உள்ள திருச்செல்வம் ஒழுங்கையில் 1 1/2 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. (17376)
077 233 8321
077 540 8208

DISCOVER - 125
மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு
சசிகிரி திருமணப்பதிவாளர் காரியாலயம் முன்பாக இராஜ வீதி, கோப்பாய்.
(கோப்பாய் பொலிஸ் நிலையத்திற்கு அருகில்) (17337)
076 113 3330

# எனக்கு கட்டவுட் வைப்பதை விடுத்து மக்களுக்கு சேவை செய்ய வாருங்கள்

## ஜனாதிபதி ரணில் அழைப்பு

தனது புகைப்படங்களை கட்டவுட்கள் மற்றும் சுவரொட்டிகளில் இனிமேல் காட்சிப்படுத்த வேண்டாம் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அறிவுறுத்தியுள்ளார்.

சுவரொட்டிகளில் தமது புகைப்படத்தை பொறிப்பதை அரசியல் தலைவர்கள் தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்று கோரியுள்ள ஜனாதிபதி கட்டவுட் மற்றும் அரசியல் கோசங்களில் இருந்து விலகி மக்களின் தேவைகளை நிறை வேற்றுவதற்கு கூட்டாக தங்களை அர்ப்பணிக்க வேண்டும் என்று அரசியல் தலைவர்களிடம் வேண்டுகோள் விடுத்தார்.

நேற்று மட்டக்களப்பு செங்கலடி மத்திய மகா வித்தியாலயத்தின் 149 ஆவது ஆண்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார். (7)

# கதவடைப்பு போராட்டத்திற்கு யாழ். வணிகர் கழகம் ஆதரவு

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி சரவணராஜாவுக்கு நீதி கோரி, தமிழ் தேசியக் கட்சிகள் திட்டமிட்டுள்ள கதவடைப்பு போராட்டத்துக்கு யாழ். வணிகர் கழகம் முழுமையான ஆதரவு தெரிவித்துள்ளது.

யாழ். வணிகர் கழக பிரதிநிதிகளுக்கும் தமிழ் தேசிய கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையில் நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற விசேட கலந்துரையாடலில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி சரவணராஜாவுக்கு நீதி கோரும் விவகாரத்துடன் தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினை தீர்வுக்கு முழுமையான சர்வதேச தலையீட்டையும் கோரி இந்தக் கதவடைப்பு போராட்டம் நடத்தப் படவேண்டும் என்றும் வணிகர் கழகம் வலியுறுத்தியுள்ளது.

தமிழ் மக்களின் உரிமை போராட்டம் சார்ந்த எந்த நடவடிக்கைக்கும் பரிபூரண ஆதரவை வழங்கிவரும் பாரம்பரியத்தை யுடைய யாழ்ப்பாண வணிகர் கழகம், இந்த போராட்டத்தையும் முழுமையாக ஆதரிப்பதாக வணிகர் கழகத்தினர் தெரிவித்தனர்.

நீதிபதி விவகாரத்துடன், தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைத் தீர்வுக்கு முழுமையான சர்வதேச தலையீட்டையும் கோரி இந்த சுதவடைப்பு போராட்டம் நடத்தப்பட வேண்டுமென்றும் வணிகர் கழகம் வலியுறுத்தியுள்ளது. (7)

## ஆப்கா...

பகுதியான ஹெராத் நகருக்கு வடமேற்கே 40 கி.மீ. தொலைவில் நேற்று முன்தினம் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவுகோலில் 6.3 ஆக பதிவானதான இந்த நிலநடுக்கத்தின் தொடர்ச்சியாக அடுத்தடுத்து தொடர்ச்சியான 5 நிலநடுக்கங்கள் ஏற்பட்டன. இந்த நிலநடுக்கத்தால் ஜிண்டா ஜன் மற்றும் கோரியான் மாவட்டங்களில் 12 கிராமங்கள் முற்றிலும் அழிந்துவிட்டன.

நிலநடுக்கத்தால் கட்டட இடிபாடுகளில் சிக்கியவர்களை மீட்கும் பணி 2-வது நாளான நேற்று தொடர்ந்து நடந்தது. மீட்பு பணியின்போது சடலங்கள் வந்து கொண்டிருப்பதாக பேரிடர் மீட்புக் குழுவினர் தெரிவித்திருக்கின்றனர்.

இந்த நிலையில், நிலநடுக்கத்துக்கு இதுவரை 2,060 பேர் பலியாகி இருப்பதாக தலிபான் அரசு அதிகாரபூர்வமாக அறிவித்திருக்கிறது. மேலும், 1000-க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வருவதால் பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என்று தெரிகிறது. (7)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சாங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (17366)
076 825 7716 (ஆகாஸ்)

தவற விடப்பட்டது
சத்தியநாதன் சசிகுமார் (763092356V) ஆகிய எனது தேசியஅடையாள அட்டை கொக்குவில் சந்திக்கும் உரும்பிராய்க்கும் இடையில் 07.10.2023 அன்று தவறவிடப்பட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். (17389)
077 762 6241

அழகுக் கலை வகுப்புக்கள் ஆரம்பம்
Ashvi Beauty Care & Academy
(Diploma in Beautician & Hair dresser class)
❑அரசாங்க நிறுவன பதிவு சான்றிதழ் இலக்கம் (NAL/DS/BR/1988)
❑உங்கள் அனுமதியினை பெற்றுக்கொள்ள நேரில் வந்து முன்பதிவு செய்து கொள்ளுங்கள். (C-7402)
Ashvi Beauty Care & Academy
Parameswara Junction,
Ramanathan Rd, Jaffna.
- 077 786 9760


அமெரிக்க லொத்தர் விசா
பதிவுகள் ஆரம்பமாகிவிட்டன
2025ல் நீங்களும் அமெரிக்காவில்...
ஒரு உறுதியான முடிவு உங்கள் வாழ்க்கையை மாற்றிவிடும்!
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம் 0768226244
எமக்கூடாக விண்ணப்பித்து வெற்றிபெற்ற ஏராளமானோர் அமெரிக்காவில்
குடும்பத்தினர்களுக்கு இரண்டு வாய்ப்புக்கள் (C-7404) விண்ணப்ப முடிவு திகதி 07-11-2023
வெளிநாட்டில் வாழ ஒரு இலவச சந்தர்ப்பம்! தவறவிடாதீர்கள்!
யாழ்ப்பாணம்-1 0777068777 | கிளிநொச்சி 0768226240 | 0776699892 | 0777469777 | திருகோணமலை 0768226237 | சாவகச்சேரி 0768226242
யாழ்ப்பாணம்-2 0768226243 | சுன்னாகம் 0764550670 | 0764550673 | பருத்தித்துறை 0768226230 | 0776697960 | கொடிகாமம் 0764550675
0768226238 | 0764550671 | 0777716322 | 0777726322 | 0743900353 | 0777720322
0764550674 | V2 Travels | 0768226236

அலுவலக வேலை - பயிற்சி
2 மாத கால பயிற்சியுடன் உடனடி வேலைவாய்ப்பு
*நீங்கள் A/L எடுத்துவிட்டு மேற்படிப்புக்காக / வேலைக்காக காத்திருப்பவரா?
*இதோ! 2 மாத கால அலுவலக வேலையுடனான பயிற்சி நெறி
*பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்

(C-7404)
சம்பளம் - 60,000/- (2 மாதம்)
V2 TRAVELS - 0777-068-777

CANADA VISA
Canada, UK, France, Australia மற்றும் அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் செய்து தரப்படும்.
அமெரிக்க லொத்தர் விசா விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.
1)Minor Education - (Age Limit - 7 to 17 years) தாய், தந்தை இருவரும் பிள்ளையுடன் பயணிக்கலாம்.
2)Visitor Visa - கனடாவில் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் உள்ளோர் விண்ணப்பிக்கலாம்.
Contact : VISA Consultant, 136, Adiyapatham Road, Thirunelvely, Jaffna. T.P : 077 038 5584 (17371)

கமலம் வர்ம சிகிச்சையகம்
Kamalam Varma Clinic
(அக்குபன்ச்சர் மற்றும் வர்ம சிகிச்சையகம்)
சகல வாதங்கள், நோக்கள், தலையிடி, சலரோகம், ஆஸ்துமா, குழந்தையின்மை போன்ற மேலும் பல வகையான நோய்களிற்கும் குறைபாடுகளிற்கும் சிகிச்சை அளிக்கப்படும்.
(ACU) Dr.Sankar
காங்கேசன்துறை வீதி, கொக்குவில்
T.P - 077 035 7307 (17356)

ஓம் விராட் விஸ்வப் பரப்பஹ்மனே நமஹ
விஸ்வகர்மா சிற்பக் கூடம்
(பரம்பரை பஞ்சகம்மாளர்)
திருக்கோயில் பொருட்கள் சிற்பசாஸ்த்திர (தேவாங்குலம்) முறைப்படி செய்பவர்
1. மூலஸ்தான காற்புறவாய் அளவின்படி, பஞ்சதாளம், நவதாளம் தஸதாளமானங்களுடன் ஆலயத்திற்கு வந்து அளவு எடுத்து அங்கலக்னத்துடன் சிலாவிக்கிரகம், செப்புத்திருமேனிகள் செய்து தரப்படும்.
2. விமானம், இராஜகோபுரம், பண்டிகைகளின் அளவின்படி வார்ப்புக் கலஸங்கள், தகட்டுக் கலஸங்கள், செய்து தரப்படும். (12" தொடக்கம் 60" வரை 16,18,20,22 weight gauge செப்புத்தகடு

3. கொடிஸ்தம்பம் 16,18,20,22 weight gauge செப்புத்தகட்டில் சிற்ப நகாஸ் வேலைப்பாட்டுடன் 10 அடிமுதல் 21 அடிவரை முறையாக செய்து தரப்படும்.
விசேட குறிப்பு
● சரியான இடத்தில் சரியான பதவின்யாஸத்தில் விக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்யவும்.
● மூர்த்திகள் முறையான அங்கலக்ஸனத்துடன் இருக்க வேண்டும். தியானம் பிழையாக இருந்தால் பிரதிஷ்டை செய்ய வேண்டாம்.
● சிற்பசாஸ்த்திரம், சிவாகமம், நன்கு தெரிந்தவர்களைக் கொண்டு மூர்த்தி நிர்மாணம் செய்யவும். (17373)
விஸ்வஸ்ரீ தியாகராஜா ரவிசங்கர் ஆச்சாரி
இல.97/2, சென் ஜேம்ஸ் வீதி, கொழும்பு 15.
தொ.பே.இல. 077 900 6584

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் ... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.10.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org